# சத்திய வேத
# பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

83-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1958-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 25-ந் திகதி வியாழக்கிழமை — பிரிதசம் 10 | 37-ம் இலக்கம்


## அன்னையின் அருள்நிறை திருத்துகில்

தற்காலம் பயங்கர நவீனயுத்த சாதன மயமானகாலம். நாஸ்திக லோகாதய மனப்பான்மைமலிந்த காலம். நவீனநாகரீகம் என்ற கொள்கையில் நன்மாந்தரின் ஆன்மீகவாழ்வை நஞ்சேற்றி நயவஞ்சகமாய்க் கொல்லுங்காலம். நச்சுப்பிரசுரம் மலிந்து நம்மவருட் பலரை நன்மதி இழக்கச் செய்யும் காலம். கலையென்றமுறையில் கண்ணை மயக்கிக்கருத்தைமாற்றிக் கண் இச்சையின் சுபாவஉணர்ச்சிக்கு மனிதனை அடிமையாக்கும் சூட்சுமகாலம். இத்தகைய சூழ்நிலைநிலவும் இன்றையஉலகத்தில் நாம்சஞ்சரிக்க நேர்ந்தபோதிலும் நாம்ஒருவிதத்தில் பாக்கியம்பெற்றவர்களே. நரகஅரூபிகளின் மேற்கண்டநச்சுவேலைகள் தற்காலம் எங்கும்மலிந்து விளங்கவேண்டுமென்பது தேவசித்தமாயினும், இவைகள் சத்தின்றிச் சுக்குநூறுகத் தெறித்துவிழ நம்மைத்தமது அன்னையாம் கன்னிமரியாயினது அன்பின்அடைக்கலத்தில் வைக்க வேண்டுமென்பதும் தேவசித்தம் போலும்.

அக்காலத்தில் யேசுபாலன் அருகிலிருந்து அவரைப்பராமரித்துப் பாதுகாத்து வந்ததுபோலத் தற்காலத்தில் அவள் வான்வீட்டில் வீற்றிருந்தபோதிலும் கண்ணையும், கருத்தையும் பூலோகத்திலே நம்மத்தியில்இருத்தி நமது ஆன்மீகவாழ்வில் நம்மோடுசஞ்சரித்து, நம்மைப்பராமரித்து வருகின்றுள் என்றுகூறின் மிகப் பொருந்தும். தற்காலம் அன்னை அமலியின் அன்பின்பொற்காலம் (Age of Mary) எனக்கூறினும் அது முற்றிலும்உண்மை. அவள் தனது சியோன்நகர மாளிகையைவிட்டுப் புதியபெத்லகேமான மனுமக்களின் இருதயங்களில் தனதுதிருச்சுதனுக்கு மறுபிறப்பளிக்கஆவலாய் நம்மைநாடி வந்துள்ளனள். ஜேர்மனி, இத்தாலி, போர்த்துக்கால், பிரான்ஸ்முதலிய தேசங்களில் அவளுடைய பிரத்தியேகபிரசன்னம் வையகத்திற்கு விசேஷஅருட்கொடையை வழங்கிற்று. அவள் நம்மத்தியில் சஞ்சரிப்பதை உலகமெத்திசையிலும் எண்ணற்றசாட்சியங்கள் உறுதிப்படுத்துகின்றன. நம்தேவ அன்னை தற்காலத்தில் தாய்க்குரிய அன்போடும், பரிவோடும் நம்மத்தியில் நடந்துசெல்லுகின்றுள்.

ஆயினும், தற்காலத்தில் அந்தகாரஅரூபியின் காரிருள்எங்கும் படர்ந்துதான் இருக்கின்றது. அவன் ஆத்துமாக்களைச் சங்கரிக்கக் கர்ச்சித்து முழங்குகிருன். அவன்ஒருகாலத்திலும் தற்காலத்திற்போல் பூலோகத்தில் தனது ஆட்சியைச் செலுத்தவில்லை. ஆனல், அவனுடையநாட்கள் நெருங்குகின்றன. இதை அவனைத்தவிர வேறுயாரும் நன்ருய்அறியார்கள். அவன் சிங்காரவனத்தின் தீர்க்கதரிசனத்தை மறந்தவனல்லன். "உன்வித்திற்கும், ஸ்திரீயின்வித்திற்கும் பகையைமூட்டுவோம். அவள் உன்தலையை நசுக்குவாள்!."

மரியன்னையின்வருகை நரகசத்துருவையும், அவள் இராச்சியத்தையும்எவ்விதம்பாதிக்குமென்று அவனுக்கு நன்ருகத்தெரியும். இவ்வுலகத்தில் மதிகெட்ட பேராசையையும், பொருமைப் பகையையும்மூட்டி மனுக்குலத்தைச் சங்கரிக்க நரகஅலகை எடுத்துவரும் மூர்க்கமுயற்சியைச் சர்வேசுரன்ஒருவரே அறிவார். உலகத்தில் தற்காலம்நிலவும் அவிசுவாசத்தைமுன்னிட்டுச் சர்வேசுரன் உலகத்தைக் கைநெகிழ்ந்தார் என்று அவன்நினைத்தான். அவன் முடிவில் உலகத்தைவென்று சிலுவையில்அறையுண்ட ஆண்டவருடைய திருக்கரங்களிலிருந்து ஆத்துமாக்களைப் பறித்துக் கொள்ளலாம்என்று மனக்கோட்டை கட்டிருன்போலும். ஆனல், அவன்முயற்சிகள் வீணுக, நமது தேவஅன்னை நம்மத்தியில் தேசத்திற்குத்தேசம் நடந்துசெல்லுவதைக்கண்ட அவனுக்குப் பொருமைத்தீ பொங்கியெழாமலிருக்குமா? அவன்நம்பிக்கை அதோகதியாக லூர்துபதியில் அன்னைபிரசன்னமாகித் தன்மக்களுக்கு வழிபகர்ந்தனள். பாத்திமாவில் மீண்டும் அன்னையின்பிரசன்னம் அவனைத்திடுக்கிடச்செய்தது. ஆனல், இன்றே தேவஅன்னை கடினவியாதியுற்றுச் சயனித்திருக்கும் உலகத்தின்மேல் தனதுதிருத்துகிலைவிரித்து அன்னையின் அன்பிற்குரியகவலைகரிசனத்துடன் அதன் அருகில் அமர்ந்திருக்கின்றனள். அன்னையின் அருள்நிறை திருத்துகிலான திருஉத்தரீயப் பக்தி சத்திய திருச்சபையில் வழங்கிவரும் ஓர்உந்நதமான பக்திமுயற்சி. அதில் ஈண்டுகூறப்படும் புனிதபச்சை உத்தரீயப்பக்தி (Green Scapular) கடந்த 19-ம் நூற்றுண்டின்மத்தியில் ஆரம்பமானது. சாத்தான் வருடக்கணக்காய் இத்திருஉத்தரீயப் பக்தியை மறைத்துவைப்பதில் வெற்றிபெற்றுன். "மரியாயின் மாசற்ற இருதய உத்தரீயம்" என்றழைக்கப்படும் அந்தஉத்தரீயம், அமலோற்பவமாதாவின் புதுமைப் பதக்கத்தைப்போல் புனிதவின்சென்ற் டீ போல் பிறர்சிநேக சபைக் கன்னியாஸ்திரிகளுக்கு மரியன்னையின் ஓர்விசேஷஅன்பளிப்பு.

1839-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 27-ந்திகதி பரீஸ்பட்டணத்தில் யூஸ்தின்பிஸ்கேபுறே (Justine Bisqueyburu) என்ற ஓர் பெண்மணி இந்தப்பிறர்சிநேக கன்னியாஸ்திரிகளின் சபையில் நவகன்னிகையாகச் சேர்ந்தனள். 1840-ம் ஆண்டு தைமாதம் 28-ந் திகதி அவளுக்கு ஓர்தெய்வீககாட்சி அருளப்பட்டது. புனிதகன்னிமரியன்னை வெள்ளுடை அணிந்தவளாய்ச் சிரசில் ஒளிபொருந்திய ஊதாநிறமுக்காடிட்டுத் தோன்றினுள். அன்னையின்கூந்தல் முக்காட்டின்கீழ் அவள் கழுத்தின் இருமருங்கிலும் முன்பக்கமாகப் பிரிந்துதொங்கியது. அன்னையின் முக்காடு அவள்கூந்தலை மறைக்கவில்லை. அவளுடைய வலதுகரத்தில் அவளின் மாசற்றஇருதயம் இருந்தது. அதன் மேற்புறத்திலிருந்து பிரகாசக்கதிர்கள் பிரதிபலித்தன. அவளுடைய கம்பீரவடிவில் வானகப்பிரகாசம் மின்னித்துலங்கியது. இளம் நவகன்னிகை இக்காட்சியைக்கண்ணுற்று ஆச்சரியபிரமிப்பும், பயப்பிராந்தியும் கொண்டனள்.

மேற்கூறியகாட்சி மாதாவின் முக்கிய திருநாட்கள்தோறும் நான்கு அல்லது ஐந்துமுறை அவளுக்கு அளிக்கப்பட்டது. மரியாயின் மாசற்றஇருதயபக்தியில் அக்கன்னிகையைப் பயிற்றுவிக்கவே இக்காட்சிகள் வழங்கப்பட்டனபோலும். நவகன்னியர் அந்தஸ்தின்காலம் முடிந்தபின் பிஸ்கேபுறேகன்னியாஸ்திரி பிலாங்கி (Blangy) என்றஊருக்கு அனுப்பப்பட்டனள். 1840-ம்ஆண்டு புரட்டாசிமாதம் 8-ந்திகதி மாதாபிறந்த திருநாளன்று அவள்செபித்துக் கொண்டிருக்கையில், மாதாமீண்டும் அவளுக்குக் காட்சியளித்தாள். அன்னையின்வலதுகரத்தில் அவளுடைய மாசற்றஇருதயம் சுவாலையுடன் விளங்கியது. அவளுடைய இடதுகரத்தில் ஓர்உத்தரீயம் இருந்தது. ஒருதுண்டுப் பச்சைநிறத்துணி ஓர் பச்சைநாடாவில் இணைக்கப்பட்டிருந்தது. அந்தத்துணியின் ஒருபுறத்திலே மாதாகாட்சியளித்த சாயல்பதிந்திருந்தது. மறுபுறத்திலே அன்னையின் கையில்விளங்கிய அவளதுமாசற்றஇருதயம் சூரியனை நிகர்த்த சுவாலையுடன் கண்ணுடிப்பளிங்கினும் தூய்மையாய் ஒளிவீசியது. இருதயத்தில் ஓர் வாள் ஊடுருவியிருந்தது. அதன் மேற்புறத்தில் ஓர்சிலுவைவிளங்கியது. இருதயத்தைச்சுற்றி இருமருங்கிலும் நீண்டவட்டத்தில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அவைகளின்பொருள்: "மரியாயின் மாசற்றஇருதயமே, எங்களுக்காக இப்பொழுதும், எங்கள்மரணநேரத்திலும் வேண்டிக்கொள்ளும்" என்பதே. அதே சமயம் பிஸ்கேபுறே கன்னியாஸ்திரி தன்உள்ளரங்கத்தில் இக்காட்சியின்பொருளை உணர்ந்தாள். மரியாயின் மாசற்றஇருதய உத்தரீயம் பிறர்சிநேகசபைச் சகோதரிகள்வழியாக அவிசுவாசிகளை மனந்திருப்பவும், அவர்களது நன்மரணத்திற்கு அச்சாரமாகவிளங்கவும் வேண்டுமாதலால், உடனே தேவஅன்னையின் மட்டில் மிகுந்தநம்பிக்கையோடு இதைவிநியோகிக்க வேண்டுமென்று அவளுக்குப்புலனுயிற்று. ஆயினும், பற்பல காரியங்களை முன்னிட்டு இவ்வுத்தரீயப்பக்தி உடனே பிரபலியமடையக் கூடவில்லை. இதைமுன்னிட்டுத் தேவ அன்னை 1940-ம்ஆண்டு முதல், 1946-ம் ஆண்டுவரை அந்தக் கன்னியாஸ்திரிக்களித்த காட்சிகளில் மனம்கசிந்து முறையிட்டனள். நாளாவட்டத்தில் தடைகள் நீங்கப்பெற்று இவ்வுத்தரீயம் வழங்கப்படவே ஆச்சரியமான பலன்கள் விளைந்தன. தேவ அன்னை இப்புனித அருட்கருவி மூலம் ஆத்துமாக்களை மனந்திருப்புகின்றனள். மாந்தரின் இருதயங்களை மாட்டுத்தொழுவமாக்கி அங்கே தன்திருமகனுக்கு மறுபிறப்பளிக்கின்றனள். மக்களின் இருதயதொட்டில்களில் தன்திருமகவை ஈன்றெடுக்க வேண்டுமென்பதே அன்னையின் பேரவா.

இவ்வுத்தரீயம் குருவானவரால் மந்திரிக்கப்பட்டு யாவராலும் அணிந்து கொள்ளப்படலாம். இதைக்கழுத்தில் அணிந்துகொள்ளலாம் அல்லது படுக்கையிலாவது, சட்டைப்பையிலாவது, அறையிலாவது வைத்துக்கொள்ளலாம். உத்தரீயத்தின்மேல் மாதாவின் மாசற்ற இருதயத்தைச்சுற்றி வரையப்பட்டுள்ள செபத்தை மட்டும் ஒருநாளில் ஒருமுறையென்கிலும் செபிக்கவேண்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லே அன் பிறே
# LEY & FREY


## முதன்மைபெற்ற வீட்டுப்பறவைகள், மிருகங்களின் உணவு வியாபாரிகள்

கொழும்புநகரிலே அரை நூற்றூண்டுகளுக்குமேல் நாம் பெற்றுள்ள அனுபவத்தைக் கொண்டு ஆடுகள், மாடுகள், கோழிகள் என்பனவாய் நீங்கள் வளர்க்கும் சீவபிராணிகள் முழுவதையும் உணவூட்டுவதற்கும், பேணிப் பராமரிப்பதற்குமாக உங்களுக்குத் தேவைப்படுகிறவைகளையெல்லாம் உதவும் சேவையில் தற்போது நாம் ஈடுபட்டிருக்கிறேம்.

(வீட்டுப்பறவைகள், மிருகங்கள் ஆதியவற்றின் உணவு நிபுணர்கள்)


உலகப்பிரசித்திபெற்ற (ஐரோப்பிய - அமெரிக்க) மருந்துகளை இருப்பிலே வைத்திருக்கிறேம். பெரும்பாலான பாடசாலைகள், குருமடங்கள், மற்றும் கிறீஸ்துவ ஸ்தாபனங்கள் நம்மை ஆதரிக்கின்றன.

யாழ்ப்பாணம், ஸ்ரான்லிரேட்டிலே 21/2 எனும் இலக்கத்தில் வேண்டியவைகளையெல்லாம் நன்ருக அமைத்துத் தற்போது ஒர்கிளைஸ்தாபனத்தைத் திறந்திருக்கிறேம்.



### கோழிகளுக்கு

| | | ரூத். | ரூ. ச. |
|---|---|---|---|
| முட்டைவர்த்தினி : 1-ம் நம்பர். | | | |
| முட்டைஇடும் கோழிகளுக்கான தானியக்கலவை | — | 100 | 26—00 |
| முட்டைவர்த்தினி : 2-ம் நம்பர். | | | |
| முட்டைஇடும் கோழிகளுக்கான தானியக்கலவை | — | 100 | 24—00 |
| முட்டைசுரபி : | | | |
| முட்டைஇடும் கோழிகளுக்கான தாதுப்பொருட்கலவை | | 100 | 21—00 |
| ஷை சீவசத்து $A + B_2 + D_3$ சேர்ந்தது | — | 100 | 22—00 |
| சீவசுரபி : | | | |
| வளரும்பறவைகளுக்கான தாதுப்பொருட்கலவை | — | 100 | 19—00 |
| ஷை சீவசத்து $A + B_2 + D_3$ சேர்ந்தது | — | 100 | 20—00 |
| கொழுக்கும் தீனி : சாப்பாட்டுக்கு வளர்க்கப்படும் பறவைகளுக்கான விசேடகலவை உணவு | — | 100 | 19—00 |
| குஞ்சுவர்த்தினி : குஞ்சுக்கான தானியக்கலவை | — | 100 | 26—00 |
| குஞ்சுச்சுரபி : சிறுகுஞ்சுகளுக்கான தாதுப்பொருட்கலவை | | 100 | 23—00 |
| ஷை சீவசத்து $A + B_2 + D_3$ சேர்ந்தது | — | 100 | 24—00 |
| வான்கோழி உணவு : | | | |
| முட்டைஇடும் பறவைகளுக்கான கலவை | — | 100 | 19—00 |
| தாரா, வாத்து உணவு : | | | |
| முட்டைஇடும் பறவைகளுக்கான கலவை | — | 100 | 19—00 |



### மிருகங்களுக்கு

| | | ரூத். | ரூ. ச. |
|---|---|---|---|
| அமுதசுரபி : 1-ம் நம்பர். பாற்பசுக்களின் கலவைஉணவு. பிண்ணுக்கு, துவரஉமி, உழுந்துமூக்கு, மைசூர்உமி, கடலைமா, கடலைக்கோது, கோதுமைத்தவிடு, உலோகச்சத்துக்கள், சோழம் என்பன விகிதசாரமாகக் கலக்கப்பட்ட உணவு | — | 100 | 18—00 |
| ஷை சீவசத்து $A + B_2 + D_3$ சேர்ந்தது | — | 100 | 19—00 |
| அமுதசுரபி : 2-ம் நம்பர். | — | 100 | 17—00 |
| எருத்துமாட்டுத்தீனி : வண்டிஇழுக்கும் மாடுகளுக்கும், வசப்பிழையான எருதுகளுக்குமான கலவைஉணவு | — | 100 | 17—00 |
| சாதாரண கலவை : 1-ம் நம்பர் | — | 100 | 15—00 |
| சாதாரண கலவை : 2-ம் நம்பர் | — | 100 | 14—00 |
| மீன் தீனி : வீட்டில் வளர்க்கப்படும் மீன்களுக்கான உணவு சிக்கனமான அளவில் சிறிய டப்பாக்களில் அடைக்கப்பட்டது. | | ¼ ருத்தல் | —50 |

—*—

| | | | |
|---|---|---|---|
| மீன்சத்து : கலவைகளுக்கு | — | 1 | —30 |
| சுண்ணக்கலவை : | — | 1 | —30 |
| எலும்புச்சத்து : சுத்திசெய்யப்பட்டது | — | 1 | —50 |
| மீன் ஈரல் நெய் : | | ஒரு கலன் | 18—50 |
| மீன் ஈரல் நெய் : | | ஒரு போத்தல் | 3—25 |

மேலும் தேவையான விவரங்களுக்கு:

LEY & FREY

65, Wolfendhal Street, Colombo.
T. Phone : 2751. — T. Gram : "EDRAJ"

21/2, Stanly Road, Jaffna.


● இறந்துபோனமனிதனின் பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட இருதயத்தை மீண்டும்இயங்கவைக்கும் நவீன முறைஒன்றைச் சோவியற் விஞ்ஞானியான பேராசிரியர் சேர்ஜி ஆந்திரேவ் கண்டுபிடித்திருப்பதாக மஸ்கோநகரிலிருந்து சென்ற 19-ந் திகதி செய்தி கிடைத்திருக்கிறது. சோவியற் வைத்திய-விஞ்ஞான கழக மண்டபத்தில் நடைபெறும் சர்வதேச விஞ்ஞான திரைப்படக்கழகத்தின் பன்னிரண்டாவது மகாநாட்டில் அவரின் சாதனைபற்றியபடம் காண்பிக்கப்பட்டது. இருதயம் மீண்டும் இயங்கஆரம்பித்தமையானது அவர் வெவ்வேறு வைத்திய முறைகளைப் பரிசீலனைசெய்ய உதவியதாம்.

● ஐக்கிய அமெரிக்கதேசத்திலே தற்போது 5 கோடியே 60 லட்சம் பிரயாணகார்கள் பாவனையில் இருந்துவருகின்றன. இவைகளில் ஒவ்வொன்றும் வருடம்ஒன்றுக்குச் சராசரிவீதமாகப் 10,000 மைல் ஓடுகின்றன. ஆகவே, முழுப்பிரயாணகார்களும் வருடம்ஒன்றுக்கு 56 ஆயிரகோடிமைல் ஓடுகின்றன.

● அதிகம் விவேகிகளும், பெயர் அறியப்படாதவர்களுமான சீரிய-பலஸ்தீனிய செமித்தியர்களை—அதாவது ஷெம் சந்ததியினரைக்காட்டிலும் மனிதவர்க்கம் பெரும் பேருபகாரிகளைக் கொண்டில்லையாம். ஏனெனில், இவர்களே 3,000 வருடங்களுக்கு மேற்பட்டகாலத்தின்முன் பாஷைக்கு எழுத்துமுறையை — அதாவது அட்சரவரிவைக் கண்டுபிடித்து எழுதியவர்களாம். அதிலிருந்தே உண்மையான சகலஎழுத்துகளும் மரபுவழி தோன்றினவாம்.

● அடுத்துநிகழும் 1959-ம்ஆண்டின் கோடைகாலத்திலே ஐக்கிய அமெரிக்கதேச நியூயோக்நகரில் ஓர் சோவியற்பொருட்காட்சியும், ரூஷியாவின் தலைப்பட்டணமாகிய மஸ்கோநகரில் ஓர் அமெரிக்கபொருட்காட்சியும் நடத்தப்படவிருக்கின்றன. இதுவிஷயமாய் ஓர்உடன்படிக்கைக்கு ஐக்கிய அமெரிக்க தேச சோவியற்ஸ்தானீகராலயத்திற்கும், அமெரிக்க அரசாங்க பகுதிக்குமிடையே சென்ற 10-ந்திகதி கைச்சாத்திடப் பட்டுள்ளது.

● நோயாளர்களின் உடல்களிலே இரத்தஞ்செலுத்துவதில் பெரும்நிபுணர்களும், உலகிலுள்ள 43நாடுகளைச் சேர்ந்தவர்களுமான 300பேர் தற்போது ரோமைநகரிலே ஓர்மகாநாடு கூடியிருக்கின்றனர். இவர்கள் அன்று வெள்ளிக்கிழமை பாப்பரசரின் வேனிற்கால மாளிகைசென்று அவரின்பேட்டி பெற்றுத் திரும்பினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிகப்பெரிய மேற்றிராசனம்

ஐரோப்பாவின் மகாப்பெரிய மேற்றிராசனம் சுவீடன்நாட்டிலுள்ள ஸ்ரொக்கோம்நகர் மேற்றிராசனமே. இது சுவீடன் முழுவதையும் அடக்கியுள்ளது. ஐரோப்பாவின் மகாப்பெரிய விசாரணைப்பங்கு வட சுவீடனைகும். இதனை ஒரேயொருகுருவானவரே விசாரணைசெய்து வருகின்ருர். சுவீடன் நாட்டின் சனத்தொகை 78 லட்சம் பேர். இவர்களில் 25,000 பேரே கத்தோலிக்கர். இவர்களிலும் சுவீடிமக்கள் 6,000 பேர் மாத்திரமே. எஞ்சியவர்கள் 1940-ம் ஆண்டுமுதல் அகதிகளாக அங்கு போய்க் குடியேறியவர்களே. அந்நாட்டில் தொண்டாற்றிவருகின்ற 61 குருப்பிரசாதிகளில் எட்டுப்பேர்மாத்திரமே அங்கு பிறந்தவர்கள்.

## திரும்பவும் , சிறைசென்ற டக்றர்

சீனதேச ஷாங்காய்நகரிலுள்ள திருஇருதயநாதர் ஆஸ்பத்திரியிலே முன்னர் நிலையாக வசித்திருந்து வைத்தியத்தொண்டாற்றிவந்தவரான டக்றர் போல் சாங்அவர்கள் இரண்டாம்முறையாகச் சிறைச்சாலைக்கு அனுப்பிவைக்கப் பட்டிருக்கின்ருர். "தேசாபிமானக் குறைவு"க்காகச் செஞ்சீனஆட்சி இவருக்கு எட்டுவருடச் சிறைத் தண்டனை விதித்திருக்கிறது. மரியாயின் சேனை கம்யூனிஸ்தஆட்சியை எதிர்த்துத்தாக்கும் ஸ்தாபனமாதலால் அதனைக் கண்டனஞ் செய்யுமாறு 1951-ம் ஆண்டு இவர் கேட்கப்பட்டார். அதற்கு இவர் மறுத்துவிடவே ஐந்து வருடசிறைத்தண்டனை விதிக்கப்பெற்ருர். சமீபத்திலே இவர் சீனக்கத்தோலிக்கரின் பிரிவினைத் தேசாபிமான சபையில் சேரமறுத்துவிட்டார்.

## யாத்திரிகர்களுக்குக் கேபிள்கார்

இத்தாலியிலே அப்பினைன்ஸ் மலைத்தொடரிலுள்ள மொந்தே வேர்ஜினே சிகரத்தின்மீது அமைந்துள்ள மாதாவின் புராதன திருசேத்திரத்திற்குச் செல்லும் யாத்திரிகர்கள் அங்குஇலகுவாய்ச் செல்லத்தக்கதாகக் கேபிள்கார் அதாவது, மின்சாரக்கம்பி வடத்தின்மீது அந்தரத்தில்ஓடும் கார் றெயில்பாதை ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய ஒருமைல் —அதாவது5,181அடிநீளமுள்ள இந்தக்கேபிள்கார்றெயில்பாதையே உலகில் அதிகம்நீளமானதென்று நம்பப்படுகிறது. இது மொந்தே பாரினியோ சிகரத்திலிருந்து மொந்தே வேர்ஜினே சிகரத்தின் உச்சிவரை அந்தரத்தில் அமைக்கப்பட்டுப் பிரயாண சேவை நடத்திவருகிறது. வேர்ஜினே சிகரத்தின்மீது ஆசீர்வாதப்பர்சபை ஆச்சிரமமும், மரியாயின் திருசேத்திரமும் அமைந்திருக்கின்றன. இத்தாலியிலே அதிகம்விரைவான இந்தக் கேபிள்கார் மணித்தியாலம் போகவும்வரவுமாக 2,000 யாத்திரிகர்களை ஏற்றியிறக்கக் கூடியது.

## லூர்துபதி யாத்திரிகர்கள்

சென்ற பங்குனிமாதம் 22-ந் திகதிமுதல் சுமார் 900 விசேஷ றெயின்கள் பிரான்ஸிய, மற்றும் பிறநாடுகளைச் சேர்ந்த யாத்திரிகர்களாய் 8,00,000 பேருக்கு மேற்பட்டவர்களை லூர்துபதி கொண்டுபோய்ச் சேர்த்திருக்கின்றன. இவர்களில் 32,000 பேர் நோயாளர்கள். இந்த விசேஷ றெயின்கள் 800 அம்புலன்ஸ் வண்டிகள் உட்படப் 10,000வண்டிகளைக்கொண்டிருந்தன. ஆனல், இந்தஎட்டுலட்சம் யாத்திரிகர்களும் லூர்துபதி சென்றுள்ள யாத்திரிகர்களில் ஒருசிறுபகுதியினரே. ஆகாய விமானங்களில் அங்குசென்றவர்களைக் கவனிக்குமிடத்து, சென்ற பங்குனிமுதல் தினமும் பத்து விமானங்கள் அப்பதியைச்சேர்ந்த ஒஸ்ஸன் விமானநிலையத்தில் வந்து இறங்கியவண்ணமிருந்தன. இவைகள் சராசரியாகத் தினமும் 600 யாத்திரிகர்களை ஏற்றிவந்து இறக்கியிருக்கின்றன. அதனல், மாதந்தோறும் விமானங்கள்மூலமாகமாத்திரம் லூர்துபதிக்குச் சுமார் 18,000 பேர் சென்றிருக்கின்றனர். இவர்களைத்தவிர வழமையானறெயின்கள், கார்கள், பிரயாணரதங்கள் ஆதியவற்றிலும் பெருந்தொகையானேர் சென்றிருக்கிருர்கள் என்பதை மறந்துவிடப்படாது.

தல் இருந்தது. 'விற்றமின்ஸ்' எனப்படும் சீவசத்துகளின் குறைவுகாரணமாகச் சாப்பாட்டின்பின் அதனைக்குடிக்க வேண்டுமென எழுதப்பட்டிருந்தது. இந்தமருந்து உள்ளபடியே முந்திரிகை ரசமாகும். தனது சகோதரர்ஒருவரைக் குருவாகக் கொண்ட அமெரிக்க மருந்து வியாபாரிஒருவரால் அதுமருந்தாகப் பெயரிடப்பட்டது. இனிப்புப் பண்டவில்லைகள் நற்கருணைக்காகப் பாவிக்கப்படக்கூடிய வட்டமான சிறு கோதுமை அப்பங்களாகும். சுவாமியார் ஆஸ்பத்திரியில் இருந்தபோது படுக்கையில் கிடந்தபடியே "மருந்து"ப்போத்தலின்மூடியைப் பூசைப்பாத்திரமாகக்கொண்டு திவ்விய பூசை நிறைவேற்றினர்.

## கோவில்மணியின் ஞானத்தந்தை

பிரான்ஸிலே றுவான்நகர் ஆசனக்கோவிலில் 'ஜோன் அவ் ஆர்க்' என்று அறியப்படுகின்ற அர்ச். ஆர்க்கின் அருளம்மாளுக்குத் தோத்திரமாய் நாமமிட்டு ஏற்றப்படவிருக்கும் புதிய மணிஒன்றுக்கு 'ஞானத்தந்தை' யாயிருக்கப் பரிசுத்தபாப்பரசர் உடன்பட்டிருக்கின்ருர். அநேகலத்தீன்நாடுகளிலுள்ள வழக்கப்படி, பெரியமணிகளும், கப்பல்களும் ஞானத்தாய்தந்தையர்களைக் கொண்டிருக்கின்றன.

## பிரமாண்டமான வெண்கலச் சுரூபம்

உலகில் மிகப்பெரிதாய் வெண்கலத்தில் வார்க்கப்பட்டதும், 38 அடி உயரமுடையதுமான சேமபாதுகாப்பு மாதாவின் சுரூபத்தைத் திரைநீக்கஞ் செய்துவைக்கும் திருவைபவம் அன்று வெள்ளிக்கிழமை இத்தாலிய தேச தோர்த்தோனு நகரில் நடைபெற்றபோது, அங்கு சமுகமாயிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களுள் ஐரிஷ்காரர், ஸ்கொட்ரிஷியர், ஆஸ்திறேலியர்கள் உட்பட லண்டனிலிருந்து போன யாத்திரிகர்களும் அடங்கியிருந்தார்கள். இந்தத்திருச்சுரூபத்தினதும், அது இருந்துவரும் திருசேத்திரத்தினதும், அதன் மணிக்கோபுரத்தினதும் சரித்திரம் முதலாவது உலகயுத்தத்துடன் சம்பந்தப்பட்டதாகும். அப்போது தொன் ஒறியோன் சுவாமியார் சேமபாதுகாப்பு மாதாவுக்குத் தோத்திரமாகப் பெரிய சுற்றுப்பிரகாரம்ஒன்றை அணிவகுத்து நடத்தினர். யுத்தத்தின்பின் நன்றியறிந்ததோத்திரமாகத் தாம் திட்டம்வகுத்திருந்த இச்சுரூபத்துக்கென்று செம்புப்பொருட்களைச் சேகரித்துவந்து, "உடைந்த கலசங்களின் குருவானவர்" என்னும் சிறப்புப்பெயரை ஈட்டிக்கொண்டார். பரிசுத்தபாப்பரசர் இத்தச்சுரூபத்தைத் தமது வேனிற்கால மாளிகையிலிருந்து ஒளிவெள்ளக் கதிர்பரப்பும் கருவிமூலம் ஒளிவீசச்செய்தார்.

# கத்தோலிக்க சமாச்சாரம்

## சோவியற் ருஷியாவும் செஞ்சீனவும்

"சோவியற்ருஷியாவுடன் செஞ்சீன சமபலம்உடையதாகுமிடத்து, ருஷியாவுக்குப் பெருஞ் சங்கடமுண்டாகும்; சீனக்கம்யூனிஸ்தர்கள் உலகஆதிக்க வல்லபத்திலும்குறைந்த எதிலும் திருப்தியடையமாட்டார்கள். ஏனெனில், 60 கோடி மக்களைக் கொண்ட பிரமாண்டமான தங்கள் சனத்தொகையையிட்டு அகிலஉலகமுமே தங்களுக்கு அஞ்சுகிறதென அவர்கள் நம்புகிருர்கள்" என்று சீனவிலே பலவருடகாலம் சிறைவாசஞ் செய்தபின் ஐக்கிய அமெரிக்க தேச பிற்ஸ்போர்க் நகரிலுள்ள தமது பெற்ருேரின் மனைக்குச் சமீபத்தில்திரும்பியவரான வண. சிறில் வாக்னர்சுவாமியார் அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்ருர். செஞ்சிலுவைச்சங்கம் தமக்கு அனுப்பிவைத்த ஓர் "விற்றமின்ரொனிக்" கொண்டும், இனிப்புப் பண்ட வில்லைகள்கொண்டும் தாம் சிறைச்சாலையிலே திவ்விய பூசை நிறைவேற்றிய ஆச்சரிய சம்பவத்தையும் சுவாமியார் எடுத்துக்கூறியிருக்கின்ருர். 1956-ம்ஆண்டின் கார்காலமுதல் சமீபத்திலே விடுதலைசெய்யப்படுகிறவரையில் அவர் 'ஆஸ்மா' எனப்படும் சுவாசகாச ரோகங் கண்டு ஆஸ்பத்திரியில் இருந்துவந்தார். செஞ்சிலுவைச்சங்கத்தால் அனுப்பிவைக்கப்பட்டுத் தாம்பெற்றுக்கொண்ட சாமான் கட்டுகளிலே நீர்மயமான பானத்தைக்கொண் [illegible]

உதாரணமாக, ஒருபோத்தல் சம்பையின்கொண்டு ஓர்கப்பலுக்கு ஞானஸ்நானம்கொடுக்கும் ஓர் மாது அதுமுதல் அந்தக்கப்பலின் ஞானத்தாயாகக் கொள்ளப்படுகிருள். றுவான்நகர் ஆசனக்கோவிலிலே இருந்துவந்த "அர்ச். ஜோன் அவ் ஆர்க் அம்மாள் மணி" ஒன்று 1944-ம் ஆண்டு ஆனிமாதம் 1-ந் திகதியன்று நடைபெற்ற விமானப் படையெடுப்பிலே முற்ருக அழிக்கப்படலாயிற்று.

## மாணவர்களின் திருயாத்திரை

வழமையில்நடைபெருத யாத்திரிகர்கள்குழுஒன்று ஓர்விசேஷ கருத்துடன் சமீபத்தில் பாத்திமாபதிபோய்ச் சேரலாயிற்று. இந்தக்குழுவைச்சேர்ந்த சர்வகலாசாலை மாணவர்களும், உயர்தர கலாசாலை மாணவர்களுமான 300 பேர் லிஸ்பன் நகரிலிருந்து 1917-ம் ஆண்டு தேவதாயார் காட்சியளித்த இடமாகிய மலைகளிலுள்ள திருப்பதிவரையிலுள்ள நூறுமைல் தூரத்தையும் கால்நடையாக நடந்துசென்ருர்கள். இவர்கள் தங்களுக்காக அல்ல, ஆனல், கம்யூனிஸ்தர்களாலே இம்சித்துத்துன்புறுத்தப்பட்டு வாடிவருந்துகின்ற ஹங்கேரிய மக்களுக்காகவே வேண்டிக்கொள்ள அங்குசென்ருர்கள். அதாவது, ஹங்கேரியர்களுக்குத் தேவதாயார் ஆறுதலும், தைரியமும்அளித்து, விரைவிலே சமய சுதந்திரமும், சமாதானமுமாகிய ஆசீர்வாதத்தை அருளுமாறே அவர்கள் மன்ருடிக்கொண்டார்கள்.

## பேதுருவானவர் மகாதேவாலய கடிகாரங்கள்

ரோமாபுரி, அர்ச். பேதுருவானவர் மகாதேவாலய கடிகாரங்கள் புதியமுறையிலே வேலைசெய்யவிருக்கின்றன. சுமார் 200வருடங்களாக மனிதகரங்கள் கொண்டு இயக்கப்பட்டுவந்த இந்தக் கடிகாரங்களும், அவற்றின் மணிகளும் மூன்று யந்திரசாதனங்கள்மூலம் இனிமேல் சாவி கொடுக்கவும், அடிக்கவும்படவிருக்கின்றன. தற்போது வத்திக்கான் பணியாளர் இந்தக்கடிகாரங்களுக்குச் சாவி கொடுப்பதற்கும், திருந்தாதிவேளைகளிலும், மற்றும்சந்தர்ப்பங்களிலும் அவற்றின்மணிகளை அடிப்பதற்குமாகக் கடிகார அறைகளுக்கு ஏறிச்செல்ல அநேகபடிகளையும், தொடர்வழிகளையும், நடைபாதைகளையும் மிகுந்த கஷ்டத்துடனும், திடுக்காட்டத்துடனும் தாண்டிச்செல்ல வேண்டியிருக்கிருர்கள். ஆனல், வருங்காலத்தில் சகலமும் யந்திரவாயிலாகவே செய்யப்படும். யந்திரங்களுக்கு எண்ணெயிடுவதற்காக மாத்திரம் காலத்துக்குக்காலம் அவர்கள் போகவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும். புதியயந்திரங்கள் ஆறடிக்குமேற்பட்ட உயரமுடையன. குறுக்கே 13 அடி நீளமுடையனவாய்க் கடிகார முகங்களிலுள்ள கடிகார ஊசிகளை அவைகள் இயக்கிக்கொண்டிருக்கும்.

"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைமை ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

1958-ம் ஆண்டு புரட்டாதிமாதம் 26-ம்தேதி வெள்ளிக்கிழமை பகிரங்கவிடுமுறை நாளாதலால் அன்று தினம் பாடசாலை நடைபெறக் கூடாது என்று இத்தால் தெரிவிக்கிறோம்.

PHILIP PONNIAH,
Gen. Manager, R. C. Schools
Jaffna, 24-9-58.

## புரட்டாசிமாதம்

**பொதுக்கருத்து:** தேசிய பொதுச் சபைகளில் இறைவனின் திருப்பெயரும், சட்டங்களும், தகுந்த இடமும், மதிப்பும் பெறும்படியாக வேண்டிக் கொள்வது.

**வேதபோதக கருத்து:** ஆசிய, ஆபிரிக்க சர்வ கலாசாலை மாணவர்கள் கிறீஸ்துநாதரை அறிந்து மதிக்கும் படியாக மன்றாடிக்கொள்வது.

சத்திய வேத
பாதுகாவலன்
1958-ம் ஆண்டு
புரட்டாசி மாதம் 25-ந் திகதி

## அங்கும் இங்கும்

"லெபனன், ஜோர்தான் நாடுகளிலே அமெரிக்க, பிரித்தானிய படைகள் இறங்கியிருப்பது ஆக்கிரமிப்புச்செயல்; அதனால் உலகசமாதானம் வெகுவாகப் பாதிக்கப்படும்; ஆகையால் அவ்விருநாடுகளிலுமிருந்து படைகளை உடனடியாகத் தருவித்துக் கொள்ளும்படி இச்சபை அமெரிக்க, பிரித்தானிய அரசாங்கங்களைக் கேட்டுக்கொள்ளுகின்றது" — "ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் உள்நாட்டுவிவகாரங்களிலே பிரித்தானிய அரசாங்கம் தலையிடுவதாலும், சைப்பிறசைப் போன்று சுதந்திரத்திற்காகப் போராடும் மக்களுக்கெதிராக அதுநடவடிக்கை எடுத்துவருவதாலும் இலங்கை பிரித்தானிய சாம்பிராச்சியத்திலிருந்து வெளியேறிவிடவேண்டும்" என்ற இரு பிரேரணைகளைக்கம்பஹாப்பிரதிநிதியான திரு. எஸ். டி. பண்டாரநாயகா சென்ற18-ந்திகதியன்றுகூடிய சனப்பிரதிநிதிகள் சபையிலே எடுத்தாண்டார். அவர்எடுத்தாண்ட பிரேரணைகள் இரண்டும் 'கலகம்பிறந்தால் நியாயம்பிறக்கும்' என்றபடி எதிர்பாராதசிலஉண்மைகளை வெளிக்குக்கொண்டுவந்தமை வியக்கற்பாலதே.

இந்தப்பிரேரணைகள் இரண்டையும்எதிர்த்துப் பிரதமர்பண்டாரநாயகா அளித்தபதிலிலே, சிங்களஆதிக்கத்தை ஏனைய இலங்கைப் பிரசைகள்மீது திணிக்கமுயலும் கம்பஹாப்பிரதிநிதி இந்தப்பிரேரணைகளைக் கொண்டுவந்திருப்பது விசித்திரமாயிருக்கிறது; அவர் கம்யூனிஸத்துடன் மிகவும்குறுகிய தேசீயத்தைக் கலக்கமுயல்வது மிகவும் விநோதமாயிருக்கிறது" என்று அடித்தாற்போல் கூறினார். டண்டகமுவாப்பிரதிநிதியான திரு. ஐ. எம். ஆர். இரியகொல்ல எழுந்து, "சிங்களவர்களாகியநாம் மற்றச் சமூகங்களை அடக்கி ஆட்சிநடத்த விரும்புகிறோம்; அதேநேரத்தில் ஏகாதிபத்தியவாதிகளையும் கண்டிக்கிறோம்; நம்மிடையே சிங்கள வகுப்புவாதிகளும் இருக்கிறார்கள்; சர்வாதிகாரம்பெற விரும்புகிறவர்களும் இருக்கிறார்கள்; மற்றநாடுகளின் பிரச்சினைகளிலே தலையிடுவதற்குமுன் எமது நாட்டிலிருந்து வகுப்புவாதத்தை முற்றாக அழித்துவிடவேண்டும்; ஹங்கேரியை, போலாந்தைத் தங்கள் குதிக்காலின்கீழ் வைத்துக்கொண்டு போர்மோஸாவைப்பற்றியும், லெபனனைப்பற்றியும், ஜோர்தானைப்பற்றியும் கம்யூனிஸ்தர்கள் பேசுகின்றார்களேயெனக் காம்பீரத்துடன் கூறி, லெபனனிலும், ஜோர்தானிலும் அமெரிக்கபடைகள் இறங்கியதையும், ஹங்கேரிய, போலாந்தநாடுகளில் சோவியத் படைகள் இறங்கியதையும் தாம் ஒருங்கேகண்டிப்பதாகத் திருத்தப்பிரேரணைஒன்றைக் கொண்டுவந்தார். ஆமாம், அமெரிக்க, பிரித்தானியபடைகள் இறங்கியதுதான் குற்றமாகவும், சோவியத் படைகள்இறங்கியது குற்றமில்லாமலும் கம்பஹாப்பிரதிநிதிக்குப் புலப்பட்டதா? இழவைகண்டால் அடிபார்க்கவேண்டுமா?

இவரைத்தொடர்ந்து நாவலப்பிட்டிப்பிரதி திரு. ஆர். ஈ. ஜயதிலக எழுந்தார். இலங்கையிலுள்ள சிங்களப்பெரும்பான்மையினர் சிறுபான்மையினரை அடக்கிக்கொண்டு, பிறவிடங்களில்நடைபெறும் ஆதிக்கத்தைப்பற்றிப் பேசுவது ஆச்சரியத்தைவிளைக்கிறது; சிங்களக் கம்யூனிஸ்தர்களெனக் கூறிக்கொண்டு சிறுபான்மையினரின் உரிமைகளைப்பறிக்க முயலுகிறவர்கள் சைப்பிறஸிலும், போர்மோஸாவிலும், ஏனையவிடங்களிலும் ஆதிக்கங்களைப்பற்றிப்பேசுவது நகைப்புக்கிடமாகும்; நாட்டிலே சகிப்புத்தன்மை குறைந்துவருகிறது; இன-மதப்பிரச்சினைகள் தலைகாட்டியுள்ள இந்தவேளை வெளிநாட்டுப்பிரச்சினைகளில் கவனம்செலுத்தாது இலங்கையில் ஒற்றுமையை வளர்க்கப் பாடுபடவேண்டுமெனக் கண்டிப்பாகக்கூறினார். இவற்றிலிருந்து இலங்கையிலே சிறுபான்மையினர்கள் எத்தகையநிலைமையில் இருந்துவருகிறார்களென்பது நன்குபுலனாகிறதன்றோ!

நிற்க, திரு. பண்டாரநாயகா பிரதமராகவந்தநாள்முதல் இலங்கையிலே ஒன்றின்பின் ஒன்றாய் நிகழ்ந்துள்ள விபரீதசம்பவங்களுக்கெல்லாம் ஓர்மணிக்கிரீடம் சூட்டியவாறாய்ச் சென்ற19-ந்திகதியன்று சனப்பிரதிநிதிகள் சபையில்நிகழ்ந்தசம்பவம் எவராலுமே துவேஷிக்கப்படத்தக்கதாகும். இந்தமானக்கேடான சம்பவம்—பாராளுமன்ற சம்பிரதாயங்களுக்குப் பெரும்பங்கம் விளைப்பதான இச்சம்பவம் இலங்கைக்குப் பேரவமானத்தை உண்டுபண்ணியதெனில் மிகையாகாது. சனப்பிரதிநிதிகள்சபையிலே பிரதமரும், பிரதிநிதிகளும் கூறியுள்ள மரியாதைக்கேடான வசைமொழிகளைக் கவனிக்குமிடத்துச் சபையின்தரம், அதன் கௌரவம்குறைந்து, ஜனநாயகமே மதிப்பற்றதாகிவிடுமோவென்று [illegible] ஆச்சரியமாக[illegible].

## முதற்பூசையும் வரவேற்பும்

கண்டி, அம்பிற்றியா, லங்காமாதா குருமடத்தில் அமலோற்பவமரியநாயகி பரித்தியாகிகள்சபைக் குருவாகச் சென்ற ஆவணிமாதம் 14-ந்திகதியன்று குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றவரும், யாழ்ப்பாணம், பரிசுத்த புதுமைமாதா கோவிலைச்சேர்ந்தவரும், சாவகச்சேரி, அர்ச். விகோரியார்கோவிற்பகுதியைத்தாயகமாகக்கொண்டவரான திரு. லோ. கி. பொன்னுக்கோன்அவர்களின் சிரேஷ்டபுதல்வருமான வண. பனிமயம் லோப்பையா, O. M. I. சுவாமியவர்கள் வருகிற ஐப்பசிமாதம் 3-ந்திகதி வெள்ளிக்கிழமை பரிசுத்தபுதுமைமாதா கோவில் வந்து சேருவார். அன்றுசாயந்தரம் 4-30மணியளவில் புதுமைமாதாகோவில் மக்களால் சுவாமியவர்களுக்கு ஓர்வரவேற்புஉபசாரம் நடத்தப்படும். மறுநாள் சனிக்கிழமை காலை 7மணியளவில் புதியகுரவர் தமதுகோவிலில் முதன்முறையாகப் பெரிய பாடற்பூசை நிறைவேற்றுவார். இவ் வைபவங்களின்போது சுவாமியவர்களின் சுற்றத்தவர்களையும், அன்பர்களையும் சமுகந் தருமாறு அன்புடன் அழைக்கிறோம்.

ஈ. பொமிக்கோ,
O. M. I.

# சுதேச வர்த்தமானம்

### அதிவண. பீற்றர்பிள்ளை சுவாமிகள்

வைத்தியசிகிச்சை பெறுவதற்காகச் சமீபத்திலே விமானமூலம் லண்டன் நகர்சென்றிருந்தவரும், கொழும்பு, சஞ்சூசையப்பர்கல்லூரி அதிபருமான அதிவண. பீற்றர்பிள்ளை சுவாமியவர்கள் அங்கு தாம்இருந்துவருகின்ற சென்ஜேம்ஸ்ஆஸ்பத்திரியில் சௌகரியமாக இருந்துவருகிறாரெனச்செய்தி கிடைத்திருக்கிறது. அவருக்குள்ள நோய் இன்னதெனத் தற்போது நிதானித்துஅறியப்பட்டுச் சத்திரசிகிச்சை நடைபெறவிருக்கிறது. இந்தச்சத்திர வைத்தியம் சிலகாலம் தாமதித்துத்தான் செய்யப்படவிருக்கிறது. சென்றதிங்கட்கிழமை லண்டனிலிருந்துகிடைத்துள்ள பிந்தியதந்திச்செய்திப்படி, சுவாமியவர்கள் ஆஸ்பத்திரியிலே "அதிகம் சௌகரி"யமாய் இருந்துவருவதாய்ச் சொல்லப்பட்டாலும், நடத்த எண்ணியிருக்கும் சத்திரசிகிச்சைக்கான திகதியைத்தீர்மானிப்பதற்காக மறுதினம் விசேஷவைத்திய நிபுணர் அவரைக்காணவிருந்ததாகவும் தெரியவருகிறது.

### பொலிஸ்காரரின் பரிதாபமரணம்

பலாங்கொடைப் பொலிசைச் சேர்ந்த சி. பியதாசஎனும் பொலிஸ்காரர் ஒருகொலைவழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியைத்தேடி மற்றும்மூன்று பொலிஸ்காரருடன் சென்றவெள்ளிக்கிழமை கல்தோட்டைக் காட்டுக்குள் சென்றனர், வழியில் யானையின்சப்தம் கேட்கவே துப்பாக்கிகளைக் கெட்டித்து வைத்திருந்த இருபொலிஸ்காரர் ஒருவர்பின்ஒருவராய் நடந்துசென்றனர். அச்சமையம் பியதாசாவுக்குப் பின்னால்வந்த பொலிஸ்காரரின் துப்பாக்கி வெடித்து அவரின்முழங்காலைச் சிதறடித்துவிட்டது. உடனே ஏனையமூவரும் பியதாசாவை எட்டுமைல்தூரத்துக்குத் தூக்கிச்சென்று, பலாங்கொடை கொண்டுபோய்ச் சேர்த்தனர். பின்பு அவர் இரத்தினபுரிஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுக் கால்துண்டிக்கப்பெற்று ஐந்துபைந்இரத்தம் செலுத்தப்பட்டும் அவர் இறந்துபோயினர். இவருக்குச்சமீபத்திலே கலியாணம் நடைபெறவிருந்தது.

### இலங்கையும் பிறநாட்டுவர்த்தகமும்

தற்போதைய சூழ்நிலைகாரணமாக இலங்கையுடன் வர்த்தகத்தொடர்பை விருத்திசெய்வதில் தாங்கள் சிரத்தை கொள்ளவில்லையென்று பிரித்தானியிலுள்ள சிலஏற்றுமதி வர்த்தகஸ்தாபனங்கள் தெரிவித்திருக்கின்றன. இது விஷயமாய்க் கடந்தசிலதினங்களிலே கிடைத்துள்ள கடிதங்களுள்ஒன்றிலே இலங்கையில்நிலவும் அமைதியற்றஅரசியல், நிதிநிலைமை காரணமாக வழக்கம்போல உங்களுடன் நாங்கள் வர்த்தகம்நடத்த முடியவில்லையென்று எழுதப்பட்டுள்ளது.

### சைக்கிள் ஓட்டப்போட்டிகள்

இம்மாதம்28-ந்திகதியாகிய வருகிற ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் 'தினகரன்'வெற்றிக்கிண்ண சைக்கிள்ஓட்டப்போட்டிக்கான ஏற்பாடுகள்யாவும் செய்யப்பட்டுவிட்டன. அன்றுகாலை 6-30மணிக்கு யாழ்ப்பாணமுற்றவெளி மைதானத்திலிருந்து ஓட்டப்போட்டி ஆரம்பமாகும். போட்டிநீதிபதிகள், அவதானநிலைய உத்தியோகஸ்தர்கள் முதலானோர் ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். போட்டியில் கலந்துகொள்ள 150பேருக்குமேல் விண்ணப்பஞ்செய்திருக்கின்றனர். யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைவரை கடற்கரையோரப்பாதையில் இந்தஐம்பதுமைல்தூர ஓட்டப்போட்டிநடைபெறும். இரண்டுமணித்தியாலத்திலும் பொதுமக்களை உற்சாகப்படுத்துமாறு பத்துமைல் சைக்கிள் ஓட்டப்போட்டிஒன்றும் நடைபெறவிருக்கிறது. இதில் பாடசாலைமாணவர்களே கலந்துகொள்வார்கள்.

### பட்டினசங்க உபதலைவர்

மன்னார்ப் பட்டினசங்கத்தின் உபதலைவராகத் திரு. ஆர். டோமினிக் அவர்கள் ஏகமனதாகத் தெரிவுசெய்யப் பெற்றிருக்கிறார் சமீபத்தில்நடைபெற்ற சங்ககூட்டத்திலே இத்தெரிவு நடைபெறலாயிற்று.

### தமிழ்ச்சர்வகலாசாலை இயக்கம்

கொழும்பிலுள்ள நாவலர்கழகத்தைத் தமிழ்ச்சர்வகலாசாலை இயக்கத்துடன் இணைப்பதெனத் தமிழ்ச்சர்வகலாசாலை இயக்கத்தினர் முடிவுசெய்திருக்கின்றார்கள். சென்றவியாழக்கிழமை நடைபெற்ற தமிழ்ச்சர்வகலாசாலைஇயக்க நிர்வாகசபைக்கூட்டத்திலே இவ்விதம் முடிவுசெய்யப்படலாயிற்று.

தித்திக்கும் தீந்தமிழிலே
நேர்மையான நடுநிலைமையிலே
வாலிபர்களுக்கு வழிகாட்டி
— மாதம் இருமுறை —
"கத்தோலிக்கு சேவை"
சந்தா ரூபா 3-50
விபரங்களுக்கு:
Mr. A. C. Silveira,
Treasurer,
Legion of Mary,
181, Bankshall Street, Colombo-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு தாண்டவன்வெளித் தபால்

**சதாசகாயநாயகி ஆண்டுவிழா:**

கிழக்குஇலங்கையிலுள்ள கத்தோலிக்க தேவாலயங்களில் இதுகாறும் கண்டுகேட்டறியாத பெருஞ்சனத்திரள் அன்று சரிந்துகொண்டிருந்தது. பஸ்களும், கார்களும் அவர்களை ஏற்றியிறக்கியவண்ணமே சென்ற 6-9-58 சனி, 7-9-58ஞாயிறு இருதினங்களிக்ளிலும் இருந்தன. இருவருடங்களின்முன் ஓர்காட்டுப்பிரதேசமாயிருந்த ஆயித்தியமலையானது இன்று சதாசகாயநாயகியின் ஆலயத்தால் மிகப்பிரஸ்தாபம்பெற்று விளங்குகின்றது. ஆலயத்தின் ஆண்டுவிழாவைத் திரளானயாத்திரிகர்கள் சமுகமாக சென்ற7-9-58ஞாயிறன்று அதுகண்டுகளித்தது.

எமதுகட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக்சுவாமிகளின் அயராத சேவையின் அரியசின்னமே இந்தச் சகாயநாயகியின் ஆலயம். தாண்டவண் வெளியிலிருந்து 20மைல் தூரத்துக்கு அப்பாலுள்ளதும், தண்ணீர்வசதியற்றதுமான இந்த காட்டுப்பிரதேசத்தைத் தெரிந்து, மாதாவின் அருளால் கிணறு ஒன்றையும், குடிசைக்கோவிலையும் அமைத்து, பின்னர் அதனிடமாக நிரந்தரமான ஆலயகட்டடவேலையையும் அரைவாசிக்குமேல் செய்துமுடித்து, மாதாவின்மகிமையை மக்கள் அறியவும், உணரவும்செய்யும் மகத்தான தொண்டினைப் புரிந்துகொண்டிருப்பவர் நம்கட்டளைக்குரவரே.

திருநாளுக்கு ஆயத்தமாக 24-8-58 ஞாயிறன்றுமாலை 5-30மணிக்கு மாதாவின்கொடி ஏற்றப்பெற்றுச் செபமாலை, பிரார்த்தனை, திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் நடைபெறலாயின. அவ்வாறே ஆயத்தநோவனைகளிலும் தொடர்ந்து தினமும் மாலை6-30மணிக்கு நடைபெற்றுவரலாயின. திருநாளுக்குமுந்திய மூன்றுதினங்களிலும் பிரசங்கங்கள் குரவர்அவர்களால் செய்யப்பட்டன.

6-9-58சனிவாரம் திரளானயாத்திரிகர்கள் தங்களுக்கென ஒப்புக்கொடுக்கப்பெற்ற திவ்வியபூசையில் கலந்துகொண்டார்கள். பகல் 10மணியளவில் கூடியயாத்திரிகர்களால் குரவர் அவர்கள்தலைமையில் சதாசகாயநாயகியின் நவநாட்செபஞ்செய்து ஒப்புக்கொடுக்கப்பட்டது. பிற்பகல்6-30மணி. ஆலயமணிஆர்ப்பரிக்க, ஒலிபரப்பி மாதாவின்புகழைப் பாடிப்பரப்ப, மெழுகுவர்த்திகள்ஏந்திய யாத்திரிகர் குழாம் ஒழுக்கெறும்புகள்போல அணிவகுத்துச்செல்ல அர்ச். மிக்கேல் கல்லூரிச் சாரணர்கள் ஒழுங்குவரிசையைக் சண்காணித்துச்செல்ல, சிங்காரிக்கப் பெற்றிருந்த சதாசகாயநாயகியின் திருச்சுரூபத்தைச் சிறப்பலங்காரத்துடனும், செபம், செபமாலை, திவ்வியகீதங்களுடனும், காட்டுப்பிரதேசத்திலே சிதறிவசித்திருந்த கத்தோலிக்க மக்களின் இல்லங்களில் அளிக்கப்பெற்ற வரவேற்புகளுடனும் சுற்றுப்பிரகாரமாகக் கொணடுவந்தார்கள். அதன்மேல் கல்லாற்றுக்கட்டளைக் குரவர் வண. எவ். எம். செலர்சுவாமிகளால் சதாசகாயமளிக்கும் மாதாவின் மகிமையைப்பற்றிச் சிறந்ததோர் பிரசங்கம் செய்யப்பட்டது. பின்னர் வண. ரி. ஆறன்ஸ், வண. எவ். எம். செலர்சுவாமிகள் துணைபுரிய எமது கட்டளைக்குரவரால் மாலையாராதனை பாடித் தேவநற்கருணை ஆசீர்வாதமும், மாதாவின் திருச்சுரூபஆசீர்வாதமும் அருளப்பட்டன. திருநாளாகிய 7-ந் திகதிஞாயிறுவாரம் யாத்திரிகர்களின் வசதியின்பொருட்டுக் காலை5-30மணிக்குத் திவ்வியபூசைகள் நிறைவேறின. பூசையின்போது கட்டளைக்குரவரால் "எங்கள்சந்தோஷத்தின் காரணமே" என்றதலைப்பின்கீழ் சிறந்தபிரசங்கம் ஒன்று செய்யப்பட்டது.

காலை7மணிக்கு விசுவாசிகள் ஆயித்தியமலைச்சந்தியிலே ஒன்றுகூடினர். கட்டளைக்குரவர் அவர்களுடன் கலந்துகொண்டனர். ஒலிபரப்பி ஒழுங்குக்கிரமத்தையும், இன்னிசையையுமபரப்பிக் கொண்டிருந்தது. வாத்தியங்கள் இசைத்தன. இயற்கையும் இன்பமானசூழ்நிலையை அளித்தது. சாரணர் தங்கள்விருதுகளுடனும், கோல்களுடனும் வரிசையாக அணிவகுத்துநிற்க, நம்திரிகோணமலை மேற்றிராணியார் இக்னேஷஸ் கிளென்னிஆண்டவர் அவர்கள் வந்திறங்கினர். அவரை மலர்மாலைசூட்டி, ஆடம்பரமாகஆலயத்துக்கு அழைத்துச்சென்றனர். ஆங்குஅவரால் பாட்டுப்பூசை நிறைவேற்றிவைக்கப்பட்டது. பூசையின்போது அவர் மாதாவின் மகிமையைப் பற்றியும், அவவின் அருளைநாடிவந்த யாத்திரிகர்களின் மன்றாட்டுகளைப்பற்றியும் அரியதோர் பிரசங்கஞ்செய்தார். பூசைமுடிவில் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது. பின்னர் ஆண்டவர்அவர்கள் நோயாளிகளையும், யாத்திரிகர்களையும் ஆசீர்வதித்தனர்.

அதன்மேல் யாத்திரிகர்கள் சதாசகாயநாயகியின் திருச்சுரூபத்தின் முன்பாக மெழுகுவர்த்திகள்ஏற்றியும், செபங்கள்ஓதியும், நோகடன்கள் நிறைவேற்றியும், செங்கற்கள் (கோவில்கட்டடவேலைக்காக) காணிக்கைவைத்தும் இவ்வாறுகத் தங்கள்வணக்கவழிபாடுகளைச் செய்துகொண்டிருந்தனர். இக்காட்சி பெரும்மாட்சியாகஇருந்தது. காலையில் யாத்திரிகர்களுக்கு நேர்கடன்முறையில் கஞ்சியும, மதியப்போசனமாக அன்னதானமும் வழங்கப்பெற்றன.

யாத்திரிகர்களைவிசாரித்தும், தண்ணீர்வசதிகளை அமைப்பித்தும், தமது வசதிகளைக்குறைத்துப் பலகஷ்டங்களிடையே சுழன்று சுழன்று ஆயித்தியமலையைச் சிறந்தமுறையில்பரிபாலித்தும் விழாவைச்சிறப்பாக்கஇரவுபகலாக அயராதுழைத்த கட்டளைக்குரவர் நீண்டகாலம் இந்தயாத்திரைத்தலத்தைப் பரிபாலித்து உயர்நிலைக்குக் கொணடுவர நம்ஆயித்தியமலைச் சதாசகாயநாயகியின் அருளை வேண்டுவோமாக! தேவைக்கேற்றவாறு பஸ்களைஒழுங்குபடுத்தியாத்திரிகர்களுக்கு வசதியளித்த இ. போ. சங்கத்துக்கு இப்பங்கின் பெயராலும், கட்டளைக்குரவர்பெயராலும் நன்றிதெரிவிக்கின்றோம். கிருஷிகசேவைப்பகுதியினரால் 5-9-58வெள்ளி, 6-9-58சனி இருதினங்களிலும் சினிமாப்படங்கள் காட்டப்பெற்று யாத்திரிகர்களுக்கு அறிவும், இன்பமும் ஊட்டப்பெற்றமை குறிப்பிடற்குரியது.

**தேவமாதாவின் பிறந்தநாள்:**

அன்றுதிங்கள்வாரம் காலை6-30 மணி. ஆலயமணியோசையும், பிள்ளைகள்கரத்தேந்திய புஷ்பங்களின் நறுமணமும் ஆலயத்தினுள்பரிமளித்தன. இப்பங்கிலுள்ளகிளென்னி ஆண்,பெண் பாடசாலை மாணவர்மாணவிகள் பூச்செண்டுகளைஏந்தி "ஏற்பீர் அம்மா தாயே எங்கள்இருதயங்களை" என்ற பாடலுடன் மாதாவுக்குத் தங்களைஒப்புக்கொடுத்தனர். அதன்மேல் பாட்டுப்பூசை, மாதாவின் பிறப்புபற்றியபிரசங்கத்துடன் கட்டளைக்குரவரால் நிறைவேற்றிவைக்கப்பட்டது. பூசையின்பின் மாசில்லாதமாதாசபையில் நிரந்தரஅங்கத்தினராகப் 15பேருக்கும், ஆயத்த அங்கத்தினராக 9பேருக்கும் சின்னங்கள்அளிக்கும் வைபவம்நடந்தேறியது. பின்னர் [illegible] யினர் நடக்கவேண்டிய முறைகள்பற்றி விளக்கப்பட்டது. வழமையான கூட்டம்நடந்து யாவரும் மாதாவின் அருளினைப் பாடிக்கலைந்தனர்.

—நிருபர்.

தணுவிலூர்

# அர்ச். அன்னம்மாள் ஆலய திறப்பு விழா

கடந்த ஆடித்திங்கள் 29-ம்நாள் சுருவில், காரம்பன் மக்களுக்குப்பொன் அட்சரங்களாற் பொறிக்கப்படத் தகுந்த ஒரு புனிதமான தினமாகும். அன்றுமாலை சூரியன் இன்னுமே தனது பொற்கதிர்களைப் பரப்பி எம் பரிசுத்த அன்னைமரிமாதாவின் மாதாவாம் அர்ச். அன்னம்மாளின் எழுந்தருள்கையைச் சுருவில், காரம்பன் கிறீஸ்துவர்களுக்கும, மற்றும அயலூர்ப் பக்தர்களுக்கும் தெரிவிக்கும் பான்மையாகப் பிரபை வீசிக்கொண்டிருந்தான். சுருவிலூரில் கோயில் கொண்டிருக்கும் பரிசுத்த அன்னைமரி மாதாவின் ஆலயத்தில் பக்தர்கள் ஒன்றுகூடிநிற்கக் கடிகாரம் ஐந்துமுறை இசைத்து நேரத்தை அறிவிக்கக் கட்டளைக்குரவர் வண. எம். எஸ். நல்லையா சுவாமியவர்கள் மோட்டர்ரதாரூடராய் வந்துசேர்ந்து ஆலயஞ்சென்று அங்கே அழகுறச் சிங்காரிக்கப்பட்டு மலர்களாலும், மாலைகளாலும் பொலிந்து விளங்கிய உயர் பீடத்தில் வீற்றிருந்த அர்ச். அன்னம்மாளின் அலங்கார சுரூபத்தை ஆசீர்வதித்தார். அதன்மேல் பள்ளிச்சிறார்கள் முன்செல்ல, அவர்களைத் தொடர்ந்து பெண்மணிகளும், ஆடவரும் இரு வரிசையாகப் பின்னே செல்ல, அர்ச். அன்னம்மாளின் திருச் சுரூபம் நன்கு சிங்காரிக்கப்பட்டிருந்த அழகியதோர் தேரில் வைத்து இரண்டு மைலுக்கப்பாலுள்ள தணுவிலூர்க்குப் பவனியாக எடுத்துச் செல்லப்பட்டது. அவ்வமயம் செபமாலைகளாலும் பாமாலைகளாலும் அர்ச். அன்னம்மாளை வாழ்த்திப் பக்தர்கள் வரிசையாகப் பக்தியுடன் சென்ற காட்சி பிறசமயமக்களுக்குமே பெரும் உருக்கமான காட்சியாயிருந்தது.

ஒன்றரைமைல்தூர பவனியின்பின் காரம்பனிலிருந்தும், மெலிஞ்சிமுனையிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் ஒன்றுகூடிவந்து மாதாவை வாத்திய வரிசைகளுடன் எதிர்கொண்டழைத்துப் புதிய கோயிலுக்கு அழைத்துச்சென்றனர். கோயில் வாயிலை அடைந்ததும் பக்தர்குழாம் அங்கேஅமைக்கப்பட்டிருந்த பந்தரில் குழுமியிருக்க, அர்ச். அன்னம்மாளின் திருச்சுரூபம் இதற்கெனச் சித்தஞ் செய்திருந்த ஆசனத்தில்ஸ்தாபிக்கப்பட்டதும் வண. கட்டளைக்குரவர் அங்கு குழுமியிருந்த ஆயிரவர்க்கு மேற்பட்ட பக்தர்கள் மத்தியிலே, பழைய ஏற்பாட்டில் சலமோன் இராசா ஜெருசலேம்தேவாலயத்தைக் கட்டியபோது பரலோகதேவன்வந்து அதற்குள் அடங்கியிருந்த அதிசய தன்மையையும், அதனுற் பரலோகத்தில் தேவனுக்குண்டான மகிமையையும் எடுத்துக்காட்டி, அத்தன்மையதான ஒரு நிகழ்ச்சியே புதியகோவிலுக்கும் உண்டானதென எடுத்துக்கூறி அர்ச். அன்னம்மாள் பக்தியையும், விசேடமாய் அவ்விடம் கேட்க வேண்டிய புத்திரபாக்கியத்தையும், அதனுல்கிடைக்கும் பிள்ளைகளின் நல்வளர்ப்பையும்பற்றிச் செய்த உருக்கமான பிரசங்கத்தைக்கேட்டு எவர்தான் உவகையெய்தாதிருப்பர்? ஈற்றில் அவர் புதியகோயிலைக் கட்டி உபகரித்த சுருவிலூர்ப் பெருமகன் திரு. எஸ். யு. சின்னத்தரை அவர்களின் வள்ளண்மையையும், குணதிசயங்களையும் பாராட்டி நன்றிகூறித் தமதுபிரசங்கத்தை முடித்தார்.

அதன்மேல் அவர் புதியகோவிலை ஆசீர்வதித்துப் பக்தர்களுக்குத்திறந்துவிடவே அர்ச். அன்னம்மாளின் திருச் சுரூபம் பக்திஆசாரத்துடன் அதனுள் கொண்டுசென்று உயர் பீடத்தின் மத்தியில் ஸ்தாபிக்கப்பட்டதும் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்துடன் அன்றையநிகழ்ச்சி முடிவுற்றது. அடுத்தநாள்காலை புதியகோயிலில் வண. கட்டளைக்குரவரால் பாடகர்குழாமின்துணையுடன் திவ்விய பூசைப்பலி நிறைவேற்றப்பட்டது. அவ்வமயம் திரளானபக்தர்கள் திருவிருந்தருந்தி அர்ச். அன்னம்மாளின் சலுகையை இரந்துநின்றனர். பூசையின்பின்னர் அர்ச். அன்னம்மாள் நேர்த்திக்கஞ்சி எல்லோருக்கும் பரிமாறப்பட்டு விழா இனிதேநிறைவாயிற்று.

அன்றுமுதல்இன்றுவரை பக்தர் குழாம் புதியகோயிலைத் தரிசித்தவண்ணம் இருக்கின்றது. சிலதினங்களிலே திவ்வியபூசையும் நிறைவேறிவருகிறது. பிரதானமாய்ச் சனிக்கிழமைதோறும் பெருந்திரளானமக்கள் சந்தானுள் மாதாவைத்தரிசித்து ஆசிபெற்றுச் செல்லுகிறார்கள். விரைவிலே இதுஒரு யாத்திரைத்தலமாகத் திகழுமென்பது பலரின்கருத்தாகும்.

—நிருபர்

# அன்னையின் அருள்நிறை...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

டும். அச்செபமாவது, "மரியாயின் மாசற்றஇருதயமே, எங்களுக்காக இப்பொழுதும், எங்கள் மரணநேரத்திலும் வேண்டிக்கொள்ளும்" என்பதாம். இச்செபத்தை அவர்கள் சொல்ல முடியாவிட்டால், அணிவிப்பவர்களே செபிக்கலாம். இத்திருஉத்தரீயப் பக்தியில் ஆச்சரியமான வரப்பிரசாதங்கள் அடங்கியுள்ளபோதிலும், அவைகள் மரியன்னையின் இறுதிக்காட்சியில் அவளுடைய இருதயத்திலிருந்து பிரதிபலித்த ஒளிக்கதிர்களின் வேறுபாட்டிற் கொப்ப, வழங்குபவர்களின் நம்பிக்கைக்குத்தக்கபடி பலனளிக்கின்றன.

பரிசுத்தபிதா ஒன்பதாம்பத்திநாத பாப்பானவர் முதல்முறை 1863-ம்ஆண்டிலும், இரண்டாம் முறையாக 1870-ம்ஆண்டிலும் இத்திருஉத்தரீயப்பக்தியை அங்கிகரித்துச் சொல்லுவார். "அந்த நல்ல கன்னியர்களுக்கு நாம் இவ்வுத்தரீயத்தைச் செய்துவழங்க அனுமதியளிக்கிறோம்என்று எழுதுங்கள்" என்றார்.

அன்னையின் பரிவுள்ளஅன்பிற்குப் பதிலன்பு காட்டுவோம். கரும்புதின்னக் கூலியும்வேண்டுமோ! திருஉத்தரீயப் பக்திமூலம் நாம்அடையும்வரப்பிரசாதங்களை இழக்கலாமா? ஆத்தும இட்சணியஆவல், நன்மரணம், உத்தரிக்கிறஸ்தலமீட்சி, அன்னையின் விசேஷபாதுகாவல். இவைகள் சாமான்யசலுகைகளா? இச்சலுகைகளை அடைய விரும்பாதார் யார்? ஆகையால், பணிவோம் அன்னையின் அன்புக்குரலுக்கு. பேணுவோம் அவரவர் அந்தஸ்திற்கேற்ப கற்பினை. சொல்லுவோம் அனுதினம் அன்னைகற்பித்தசிறுசெபத்தை. தரிப்போம் அவள்அன்பளிப்பான உத்தரீயத்தை. அடைவோம் அவள்பதம் நித்தியவான்வீட்டில். வாழ்கமரியன்னை! வளர்க அன்னையின் அன்பில்சேவை!

(BR. அந்தோனிசாமி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவில் நடந்தது

"விண்மீன்"

நான் ஒருகுருவானவர். குருவாகுமுன் ஒருடக்றாகஇருந்தேன். வைத்தியதொழில் ஆரம்பித்தபுதிதில் ஒரு பெண்ணைச்சந்தித்தேன். அவளது சொந்தஊரையோ, பெற்றோர்சுற்றத்தாரையோதானும் தெரிந்துகொள்ளாமல் அவளைக்கலியாணம் செய்துகொள்ளப்போகும் அளவிற்குவந்துவிட்டேன்.

அப்பொழுதுதான் எனக்கு அந்தப் பெரியஅதிர்ச்சி ஏற்பட்டது. அவள் ஏற்கனவே விவாகமானவள். அவள் இறந்துவிட்டாளென்று யாராவது சொல்லியிருந்தாலும் நான்அவ்வளவு வருத்தப்பட்டிருக்க மாட்டேன். உள்ளம்வெந்து புண்ணாகியது. பெரும் ஏமாற்றம். என்னால் நெடுநாட்களாக வேலையேசெய்யமுடியவில்லை.

அவளோ தன்னைமணந்து கொள்ளும்படி வேண்டினாள். சட்டத்தையும், நீதியையும் புறக்கணிக்கச்சொன்னாள். தன் அன்பை எடுத்துச்சொன்னாள். நான் தன்னை ஏற்றுக்கொள்ளாவிட்டால் தனக்குக்கதியே இல்லையென்று வேண்டினாள். அப்பப்பா, நான்கடைசியாக அவளைச்சந்தித்த நேரத்தை இப்பொழுது நினைத்தாலும் என்மனம் என்னபாடுபடுகிறது.

"நான் உன்னிலைக்காக மிகவும்வருந்துகிறேன். என்னால் உனக்கு இப்பொழுது எந்தஉதவியும் செய்யமுடியாது. நான்கடவுளிடம் எந்நாளும் உனக்காக வேண்டிக்கொள்வேன்" என்றேன். ஏதோதீர்க்கதரிசனமாகச் சொல்வதுபோல் தொடர்ந்து "பிறகு ஒருநாள் கட்டாயம்உன்னைச் சந்திப்பேன், அப்பொழுது உனக்குஉதவி செய்வேன்" என்றேன். மேலும் அங்கிருக்கப்பிடிக்காமல் உடனேயே அவளைவிட்டுப்பிரிந்தேன்.

* * *

இருபத்தைந்துஆண்டுகள் ஆகிவிட்டன. எனது அநுதினபலிபூசையில் என்பெற்றோருக்காக வேண்டிக்கொண்டிக்கொண்டபின் பேரிக்காகவும்— அதுதான் அவள்பெயர் — வேண்டிக்கொள்ளத் தவறியதில்லை. நினைவுவந்தபொழுதெல்லாம் அவளுக்காக வேண்டிக்கொண்டுவந்தேன். நான்கேள்விப்பட்டதெல்லாம் அவள் ஒரு அந்நிய தேசத்திற்குச் சென்றுவிட்டாள்; யாரையோ மணந்துகொண்டாள்; ஆனால், மிகவும் கேவலமானவாழ்க்கை நடத்துகிறாள் என்பதுமட்டுமே. எனது செபங்கள் கேட்கப்படவில்லையே என்று மனம்வருந்தினேன்.

நான் குருத்துவமாணவர்களுக்குத் தர்க்கசாஸ்திரம் போதித்துக்கொண்டிருக்கிறேன். பக்கத்துக் கிராமத்திலுள்ள பங்குக்குருவானவருக்கு உதவியாகச்சனிக்கிழமைசாயங்காலம் பாவசங்கீர்த்தனம் கேட்பதற்கும், ஞாயிற்றுக்கிழமைப் பூசைசெய்வதற்கும் வாரந்தோறும் அந்தக்கிராமத்திற்குச் சென்று திங்கட்கிழமைகாலை குருமடத்திற்குத்திரும்பிவிடுவேன்.

அன்றுதிடீரென அழைப்புவந்தது. பங்குக்குருவானவர் வியாதியாயிருந்ததால் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டிருப்பதாயும், என்னைவந்து பூசைசெய்யும்படியும்கேட்டிருந்தார்கள். சாயங்காலம் 5மணிக்குமேல் புறப்பட்டேன். வழியிற் காற்றுவேகமாக வீசஆரம்பித்தது. பனிமழை பெய்யத்தொடங்கியது. குளிர்ந்தகாற்று உடலைச்சில்லிடச்செய்தது. இடிமுழக்கமும், காற்றின்அலறலும், பனிமழையின் குளிரும்சேர்ந்து இருளின் பயங்கரத்தை அதிகரிக்கச்செய்தன. கடவுளுக்குநன்றி — நான்ஒருஆபத்துமில்லாமல் பங்குக்குருவானவரின் வீட்டையடைந்தேன்.

அவ்வீடு இருட்டாக இருந்தது. அங்குள்ளபொருட்களை உற்றுநோக்கினேன். முதலில் என்கண்ணில்பட்டது ஓர்மனிதஉருவம். என்னைக்கண்டும் எழுந்திருக்காது உட்கார்ந்திருந்தான்.

"சுவாமி, நான்இந்தஊரில் பிரேத அடக்கஞ் செய்பவன். தாங்கள் கீழேயுள்ள அறையிலிருக்கும் உடலைப் பார்த்தீர்களா?"

"என்ன, உடலா? எங்கிருந்துவந்தது? யாருடையஉடல்?"

அந்தஅந்நியன் விளக்கமாகச்சொன்னான். "அது ஒருபெண்ணின் பிரேதம். அதைஅடக்கஞ்செய்யப்பங்குச்சுவாமியாரைக் கூப்பிடவருமுன், சுவாமியாருக்குச் சுகவீனம்ஏற்பட்டு ஆஸ்பத்திரிக்குப் போய்விட்டார். தாங்கள் போகுமுன் அந்தப்பிரேதத்தை அடக்கஞ்செய்துவிட வேண்டும்"என்று ஆத்திரப்பட்டான்.

"ஏன் இவ்வளவு ஆத்திரப்படுகிறாய்? இறந்து சிலமணிநேரந்தானே ஆகிறது; உடலிலுள்ள சூடுகூட, முழுவதும் போயிருக்காதே; அவளின்ஆத்துமஇளைப்பாற்றிக்காகச் செபம், பூசை முதலியன இல்லாமல் அடக்கஞ்செய்ய அவ்வளவுஎன்ன அவசரம்?" என்றேன்.

"அந்தப்பெண்ணுக்குச் செபம், பூசை எதுவுந்தேவையில்லை சுவாமி. அவள் எப்படிவாழ்ந்தாளோ அப்படியேஇறந்துவிட்டாள். அவளுக்கு உற்றார்உறவினர் யாருங்கிடையாது. அவள் மனிதஇனத்திற்கே ஒருசாபக்கேடு. இழிவானவாழ்க்கை நடத்தினாள் குடிகாரி. அவளால் எத்தனையோபேர் கெட்டுப்போயிருக்கின்றார்கள். அவளுக்காகக் கவலைப்பட்ட யாருமில்லை."

"எப்படிஇருந்தாலும், அவளுக்காகச்செய்யப்படும் பூசையில் குருவானவரும், அவளதுபிரேதமும்மாத்திரம் இருந்தபோதிலும் அவள் மனிதஇனத்தில் ஒருத்திஎன்ற காரணத்திற்காகவாவது பூசைசெய்யவேண்டும்; மிருகத்தைப்போல் அடக்கஞ்செய்யக்கூடாது"என்றேன்.

"நல்லதுசுவாமி, பங்குச்சுவாமியாருக்கு அவளைப்பற்றி நன்றாகத் தெரியும்; அவர் அவளை உடனே அடக்கஞ்செய்யச் சொன்னார்; ஆனால், அதற்குள் அவருக்குச் சுகமில்லாமல் போய்விட்டது; கடுமையானகாற்றுக் காரணமாக அடக்கமும் தடங்கல்பட்டுவிட்டது; அவள்பிரேதத்தைக் கீழேயுள்ள அறையில்வைத்துத் தங்களுக்கு அசௌகரியமும், சிரமமும் கொடுப்பதற்காக மன்னித்துக்கொள்ளுங்கள்; நாளைக்காலைவந்து அடக்கத்திற்கு ஏற்பாடுசெய்கிறேன்."

"பரவாயில்லை. எனக்கு ஒருகஷ்டமுமில்லை. வெளியில் காற்று அதிகமாக இருக்கிறதே. கொஞ்சம் தங்கிப் போகலாமே."

"இல்லைசுவாமி, நான்சிரமமில்லாமல் போய்விடுவேன்." அவன் போய்விட்டான்.

காற்றின்வேகம் குறையவில்லை. கதவுகள் படார்படாரென்று அடித்துக்கொண்டிருந்தன. இருந்தாற்போல் இருந்து அறையில்எரிந்துகொண்டிருந்த ஒரேமின்சாரவிளக்கும் திடீரெனஅணைந்துவிட்டது. எங்கும் ஒரே இருள். திடீரென என் அறைக்கு நேர்கீழே பிரேதப்பெட்டி இருப்பது ஞாபகத்திற்குவந்தது. நெஞ்சுபடபடவென்று அடித்துக்கொண்டது. ஒரு நிமிஷந்தான். மனதைத் திடப்படுத்திக்கொண்டேன். எத்தனைபிரேதங்களை நான்வெட்டிப் பார்த்திருக்கிறேன்; இதற்கெல்லாம்பயப்படலாமா?...

நல்லவேளையாக நான்கொண்டுவந்திருந்த தோற்பையில் ஒருரோச்லைற் இருந்தது. இருட்டில்தடவிக்கொண்டு அதைத்தேடிப்பிடித்து எடுத்தேன். லைற்றைஅடித்துச் சுற்றுமுற்றும்பார்த்தேன். ஒருமூலையில் அழுக்கடைந்த ஒருமேசைமீது [illegible] கரைந்துகிடந்தது. ஆ! அதுபோதும், இன்றையஇரவைக் கழிப்பதற்கு. எடுத்துக்கொளுத்தினேன். சாப்பாட்டு அறைசென்று ஒன்றிரண்டுரொட்டித்துண்டைச் சாப்பிட்டுவிட்டு, நாற்காலியில்போய் உட்கார்ந்தேன். அன்றைய எனதுகட்டளைச்செபத்தைச் செய்யத் தொடங்கினேன். நான்முடிக்கும்பொழுது மணிபதினொன்று. படுப்பதற்காக எழுந்தேன். என்ன! ஏதோ சப்தம் கேட்கிறதே! எங்கேயோ தூரத்திலிருந்து வருவதுபோல்தெரிகிறது. ஆம், பெண்குரல். சப்தம் தொடர்ந்துகேட்டது. எனக்குப் பிரேதத்தின்ஞாபகம் வந்தது. உடல்நடுங்கியது. சீ! என்மனம்! கேட்ட குரலில் அவசரமும், இரக்கமும் தொனித்தது. அதற்குமேல் என்னால் இருக்கமுடியவில்லை. மனது சும்மா இருக்குமா? ஒருவேளை பிசாசின் தொந்தரவாக இருக்குமோ! மறுபடியும் உடல்நடுங்கியது. ஒருகுருவானவர் இதெற்கெல்லாம் பயப்படலாமா? ஒருகையில் செபப்புத்தகத்தையும், தீர்த்தத்தையும் எடுத்துக்கொண்டேன். மற்றொருகையில் மந்திரித்த மெழுகுதிரி. வாய் என்னைஅறியாமல் மனவல்லயச்செபங்களை உதிர்த்துக்கொண்டிருந்தது. இந்தவிதமாக என்னைத்தயார்செய்துகொண்டு கீழே இறங்கினேன் சப்தம்நின்றது. ஆனால், யாரோகதத்தால்பிறுண்டுவதுபோன்று கேட்டது. கூர்ந்துகவனித்தேன். பிரேதப்பெட்டியின் பலகையிலிருந்த சிறியதுவாரத்தின்வழியாகச் சப்தம் கேட்டது. என்மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. என்ன, பிரேதம் உயிர்த்துவிட்டதா? என்னால் தாங்கமுடியவில்லை. என்னைஅறியாமலே பக்கத்தில் ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தேன். நல்லவேளை ஒரு பெரிய'ஸ்குறுடிறைவர்' கிடந்தது. எடுத்துப் பெட்டியின்மேற்பலகையைக் கழற்றினேன். அவ்வளவுதான் நான் பலகையை எடுக்குமுன் உள்ளிருந்த ஒருகை பலகையைக் கீழேதள்ளியது.

என்கண்முன்னால் பெட்டியினுள்ளே அப்பிரேதம்எழுந்து உட்கார்ந்தது. என்னைப்பார்த்தது. பேசஆரம்பித்தது. ஆ! மேரி! என்கண்கள்சுழன்றன. நெஞ்சில் இரத்தமெல்லாம் உறைவதுபோன்று உணர்ந்தேன். அவள்முகத்தை உற்றுநோக்கினேன், ஒரேசுருக்கம். வற்றிவதங்கிப் போயிருந்தது. எலும்புந்தோலும் மாத்திரம்இருந்தன. அதுமாத்திரமல்ல, இப்போது உயிரும் இருந்தது. என்சந்தேகம் விடவில்லை. அது காடுமுரடாய்க் குளிர்ந்துபோய் என்கையைஉறுத்திற்று. அவள் என் பெயரைச்சொல்லிக் கூப்பிட்டாள். நான்சுருக்கமாக, 'மேரி' என்றேன். அவள்தொடர்ந்து "நீங்கள் பலவருடங்களுக்குமுன் எனக்காகக் கடவுளிடம் வேண்டிக்கொள்வேன்; ஒருநாள் உன்னைச்சந்திப்பேன்; அப்பொழுது உனக்கு உதவிசெய்வேன் என்றீர்கள்; நீங்கள் ஒருகுருவானவர் என்று எனக்குத்தெரியும்; உங்கள்உதவி எனக்கு இப்பொழுதுதான் மிகவும்தேவை; நல்லது; இப்பொழுதே என்பாவசங்கீர்த்தனத்தைக் கேளுங்கள்"என்றாள்.

"நான் பெரியபாவி; என்னை மன்னியுங்கள்"என்று ஆரம்பித்து, என்னை அவள் தனதுவாழ்நாளில் நடந்த எல்லாநிகழ்ச்சிகளுக்கும், இடங்களுக்கும், துன்பங்களுக்கும், மேடுபள்ளங்களுக்கும் இட்டுச்சென்றாள். எனது இருபத்தைந்துவருட குருத்துவ வாழ்க்கையில் இந்தமாதிரியான ஒரு நல்லபாவசங்கீர்த்தனத்தைக் கேட்டதில்லை. என்நெஞ்சம் விம்மியது. அவளதுமுகத்தைப் பார்த்தேன். கண்களில் தாரைதாரையாகக் கண்ணீர் [illegible] களில் மனஸ்தாபம்பெருக்கெடுத்தது. உணர்ச்சிப் பெருக்கில் அவள் இருதயம் பேசியது.

அவள்பேசிமுடித்ததும் என்கையை உயர்த்தி "நான் உன்பாவங்களை மன்னிக்கிறேன். கடவுள் உன்னை ஆசீர்வதிப்பாராக"என்று ஆசீர்வதித்தேன். என்நெற்றியில் வியர்வை தேங்கிநின்றது.

அடுத்தநிமிஷம் என்ஆச்சரியம் எல்லைகடந்தது. "சுவாமி நன்றி" என்று சொன்னாள். பின்னர் என் பெயரை ஒவ்வொருஎழுத்தாக வெகு அன்போடு திக்கித்திக்கிச் சொல்லமுடியாமல் சொல்லிக்கூப்பிட்டாள். நான் வைத்தகண்வாங்காமல் பார்த்தேன். அவள்கண்கள் என்கண்களைச் சந்தித்தன. கொஞ்சக்கொஞ்சமாக அவைகள்மருண்டன. அவள் உடல் மறுபடியும்பெட்டியினுள் தூபென்று சாய்ந்துவிட்டது. அவள்மூச்சு நின்றது. என்கண்முன்னே மறுபடியும் மேரி சவமாகிவிட்டாள். ஒருநிமிஷத்திற்குமுன் தன்னோடுபேசினாள். இப்பொழுது அவளதுஆன்மா கடவுளின் சந்நிதியில் இருக்கிறது.

என்உணர்ச்சிகளைப்பற்றி நான்எப்படிச் சொல்லமுடியும்? மரக்கட்டைபோல் அங்குநின்றேன். குனிந்து அவளதுநெற்றியைத்தொட்டுக் கடைசி ஆசீர்வாதம் கொடுத்தேன். முழங்காலிலிருந்து அவள்ஆத்துமத்திற்காக வேண்டிக்கொண்டிருந்தேன். இது நடக்கக்கூடியதா? இறந்த லாசரை உயிர்ப்பித்த யேசுக்கிறீஸ்துநாதர் மறுபடியும் இந்தஇருட்டறையில் வந்து ஏழை என்வேண்டுதலுக்காக ஒருபிரேதத்தை உயிர்ப்பிக்கத் திருவுளங்கொண்டாரா?... எவ்வளவுநேரம் அப்படிஇருந்தேன் என்று தெரியாது...... அதன்மேல் பலகையை எடுத்துப் பெட்டியைமூடினேன். மேல்அறைக்கு திரும்பிச்சென்றேன்; அடுத்தநாட்காலை நான் பூசையை முடித்ததும் அடக்கஞ்செய்பவன் வந்தான்.

"சுவாமி, காற்று அமர்ந்துவிட்டது. அடக்கஞ்செய்யலாமா? நேற்றுஇரவு ஏதாவதுவிசேஷம் உண்டா?"என்று கேட்டான்.

"ஒன்றுமில்லை, எனக்குப் பலவருடங்களாகப் பழக்கமான ஒருபெண் வந்திருந்தாள். அவளை உங்களுக்குத் தெரியாது. கொஞ்சநேரந்தான் பேசினாள். அதற்குள் போய்விட்டாள்."என்றேன்.

"என்ன, நேற்றையகடுங்குளிரிலும், காற்றிலும் யாருமே வரமுடியாதே; எப்படி அந்தப்பெண் வந்தாள்? சரி, சரி, போய்வேலையைப் பார்ப்போம். என்றுசொல்லிச் சென்றுவிட்டான் அடக்கஞ்செய்யும் அம்மனிதன்.

— ஞானதூதன்

---

● 1954-ம்ஆண்டு பரிசுத்தபாப்பரசர் அபாயகரமான நோய்கண்டிருந்தபோது அவருக்குச் சிகிச்சைசெய்வதற்கு ஆலோசகர்களில் ஒருவராய் அழைக்கப்பட்டிருந்தவர்களில் ஒருவரான பேராசிரியர் இறப்பாயேல் பபுலூஸிஅவர்கள் அன்று வெள்ளிக்கிழமை றோமைநகரில் காலஞ்செல்லலாயினர். இவர் கான்சர்எனப்படும் புற்றுநோய்விஷயமாய் உலகப்பிரசித்திபெற்ற வைத்தியநிபுணரும், பிரபலசத்திரவைத்தியராகச் சர்வதேசங்களிலும் அறியப்பட்டவருமாவர்.

● அர்ச். பத்தாம்பத்திநாத பாப்பானவர் 1858-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 18-ந்திகதியன்று குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றார். அதனால், அவர் குருப்பட்டம்பெற்ற நூறும் ஆண்டு நிறைவுவிழா இம்மாதம் 18-ந் திகதியன்று இத்தாலியதேசறெவியோ நகரிலே குருத்துவத்தை மகிமைப்படுத்தும் ஓர்தினமாகக் கொண்டாடப்படலாயிற்று. அர்ச். பத்தாம்பத்திநாதர் றெவியோநகரின் பறிஞமேற்றிராணியாராலே குருத்துவாபிஷேகஞ் செய்யப் பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரியன்னையின் இரகசியம்

தமிழாக்கம் : திரு. மி. சந்தியாகுஅவர்கள் (புனிதஇராயப்பர் கழகம்)

### III. பரிசுத்த அடிமைத்தனத்தின் உள்ளரங்க பயிற்சிகள் :

(முன் தொடர்ச்சி)

எக்காரியத்தையும் துவக்குமுன் நாம் நம்மை முழுவதும், நமது நோக்கங்களையும் மறுத்தல்வேண்டும். நம்மைக் கடவுள் முன்னிலையில் ஒன்றுமில்லாதவர்களாக நிறுத்திச் சுபாவத்திற்குமேலான, நமது ஈடேற்றத்திற்கு உபயோகமான எச்செயலையும் செய்ய இயலாதவர்கள் என்று எண்ணவேண்டும். நம்மை முற்றிலும் மாதாவோடும், அவளுடைய எண்ணங்களோடும் எவைஎன நமக்குத் தெரியாவிடினும் ஒன்றித்து அவளுடைய அடைக்கலத்தை நாடி அடையவேண்டும். அவ்விதம் மரியாள்வாயிலாக யேசுவின் கருத்துக்களோடு நம்மையே ஒன்றிக்கவேண்டும். வேறு வார்த்தைகளில் கூறவேண்டுமானுல், நம்மையே மரியாளின் கரங்களில் கருவிகளாக ஒப்படைக்கவேண்டும். அவ்விதமாக அவள் நம்மில், நம்மோடு, நமக்காக ஆசிப்பதையெல்லாம் செய்யவும், அவற்றைத் தமது திருக்குமாரனின் அதிமிக தோத்திரத்திற்காகவும், அவர்வழியாகப் பிதாவின் அதிமிக மகிமைக்காகவும் செய்யவும் விட்டுவிடவேண்டும். அவ்விதமாக நமது உள்ளாந்தர வாழ்வினுடையவும், புண்ணிய சாங்கோபாங்கத்தினுடையவும் வேலையெல்லாம் மரியாளின் உதவியை எதிர்பார்த்து வாழ்வதன் மூலமே நடைபெறுகிறது.

நாம் எல்லாவற்றையும் மரியாளில் செய்தல்வேண்டும். அதாவது, நாம் நமது புலன்களை அடக்கி உள்ளத்தில் ஆழ்ந்து யோசிக்கவும், அவ்விதமாக மரியாளுடைய ஞான உருவத்தை நம்மில் பதிப்பிக்கவும் சிறிது சிறிதாகப் பழகவேண்டும். அவள் நமது ஆத்துமத்தின் செபக்கூடமாக ஆகிவிடுவாள். எங்கே நமது செபம் கேட்கப்படாமல் போய்விடுமோ என்னும் பயமின்றி அந்தச்செபக்கூடத்தில் நமது செபங்களைக் கடவுளுக்கு ஒப்புக் கொடுக்கலாம் அவள் நமக்குத் தாவீது அரசரின் உப்பரிகையாக இருப்பாள். அங்கு நமது விரோதிகள் அனைவரிடமிருந்தும் தப்பித்து அடைக்கலம் புகலாம். நமது உள்ளத்திற்கு ஒளி வீசும் இறைபன்பால் பற்றியெரியச் செய்யும் சுடர்விளக்காக இருப்பாள். மரியாளிலும், மரியாளோடும் கடவுளை ஆழ்ந்துதியானிக்கும் பரிசுத்த பீடமாக அவள் இருப்பாள். சுருங்கக்கூறின், கடவுளோடு பழகுவதில் நமது ஆத்துமத்தின் ஒரே வழியாக இருப்பாள். அவளே நம்அனைவருக்கும் அனைத்திலும் அடைக்கலம். செபிக்கும்பொழுது மரியாளில் செபிப்போம். திவ்விய நற்கருணையில் யேசுவை உட்கொண்டால், யேசு மரியாளில் மகிழுமாறு அவரை மரியாளின் கரங்களில் ஒப்படைப்போம். எதைச்செய்தாலும் மரியாளில் செய்வோம்; எங்கும், எச்செயலிலும் நம்மை மறுத்து அவளுக்கு அளிப்போம்.

மரியாளின் வாயிலாக அல்லாமல் நான் ஒருபொழுதும் நமது ஆண்டவரை அண்டுதல் கூடாது. அவளது பரிந்துபேசும் தன்மை, நமது ஆண்டவர் மட்டில் அவளுக்குள்ள வல்லபம் ஆகியவற்றின் வழியாகவே ஆண்டவரை நாம் நெருங்குதல் வேண்டும். யேசுவிடம் நாம் செபிக்கும்போதெல்லாம் மரியாளும் நமது அருகில் இருக்கவேண்டும்.

இறுதியாக நாம் செய்யும் செயல்கள் அனைத்தையும் மரியாளுக்காகவே செய்யவேண்டும். மகிமை பொருந்திய இவ்வரசியின் அடிமைகளாக நாம் இருப்பதால் அவளுக்காக, அவளுடைய நன்மைக்காக, அவளுடைய மகிமைக்காக நாம் எல்லாவற்றையும் செய்யவேண்டும். இதுவே நமது கிட்டிய நோக்கமாகும். நம்முடைய கிரியைகளைக் கடவுளுடைய அதிமிக தோத்திரத்திற்காகவும் செய்யவேண்டும். இதுதான் நமதுகிரியைகளின் தூரநோக்கம். நாம் செய்யும் ஒவ்வொரு செயலிலும் சுயநேசத்தை விட்டொழிக்க வேண்டும். ஏனெனில், இந்தச் சுயநேசம் அநேக முறைகளில் திருட்டுத்தனமாக நாம் உணராத வகையில் தன்னையே நமது செய்கைகளின் நோக்கமாக ஏற்படுத்திக் கொள்கிறது. நமது இதயபூர்வமாகக் கீழ்வரும் செபத்தை அடிக்கடி சொல்லவேண்டும்.

"ஓ, என் அன்புமிக்க அன்னையே! நான் இங்கு (அல்லது அங்கு) போவது உமக்காகவே; இதை (அல்லது அதை)ச் செய்வது உமக்காகவே; இந்தத் துன்பத்தை அல்லது பிழையைச் சகித்துக்கொள்வதும் உமக்காகவே."

#### i. பரிசுத்த அடிமைத்தனத்தின் எழுச்சியைப்பற்றிய நடைமுறை அறிவுரை

ஆத்துமமே! எச்சரிக்கையாயிரு. யேசுவிடம் நேராகப் போவது உயர்வானதுஎன்று எண்ணுதே. அன்னைமரியின்றி உன் செயலும், எண்ணமும் மிகச் சொற்ப மதிப்புடையவைகளே. அதற்கு மாருக மரியாள் வாயிலாக இறைவனை அடைவாயானுல், உன்செயல் ஒவ்வொன்றும் மரியாளுடையதாகும். அதன் காரணமாக அச்செயல்கள் இறைவனுக்கு உகந்ததும், மிக்க மதிப்பிற்குரியனவாகவும் ஆகும்.

அன்றி, நீ சொல்வதையும், செய்வதையும் நுகர்ந்துமகிழ (சுகித்து அனுபவிக்க) முயற்சி செய்யாதே. மாருக, மரியன்னை இவ்வுலகில் இருக்குங்கால் எவ்வித தூய விசுவாசத்துடன் ஒவ்வொன்றையும் சொல்லியும், செய்தும் வந்தாளோ அவ்விதமே, நீயும் சொல்லி, செய்து பழகு. அவ்வித தூயவிசுவாசத்தை உனக்கு அவ்வன்னை சரியானசமயத்தில் அருளுவாள். இரங்கத்தக்க அடிமையே! உன் தலைமையான அரசிக்கு இறைவனின் தெளிவான பார்வையையும், விண்ணுலக உவகை, மகிழ்ச்சி, மனநிறைவு, செல்வம் ஆகியவைகளையும் விட்டுவிட்டுத் தூயவிசுவாசத்தோடு மனஅமைதி கொள். நீ எவ்வளவு வெறுப்பு, மனக்குழப்பம், சலிப்பு, உலர்ந்தவனுய் இருப்பினும் உனது அன்னை விண்ணுலகில் செய்து வருபவைகளுக்கு எல்லாம் "அப்படியே ஆகக்கடவது" என்று சொல். அதுவே நீ தற்பொழுது செய்யவல்ல சிறந்த காரியம்.

உன்னைத்தானே வேதனைக்கு உள்ளாக்கிக் கொள்வதனுல் நமது பரிசுத்த அன்னையின் பிரசன்னத்தை உனது ஆத்துமத்தில் நுகர்ந்து மகிழாவிடின், அவ்விதம் உன்னைத் தானே வேதனைக்கு உள்ளாக்கிக் கொள்ளாதிருக்க அதிக அக்கரை கொள். ஏனெனில், நமது அன்னையின் பிரசன்னத்தை நுகர்ந்து மகிழ்வது யாவருக்கும் அளிக்கப்பட்ட வரமல்ல. இறைவன் தமது அணைகடந்த இரக்கத்தால் இவ்வித உதவியை ஒருஆத்துமத்திற்குச் செய்வாரானுல், அவ்வித அருளை இழந்துவிடுதல் மிகஎளிது. இவ்விதம் நடைபெருதிருக்க நாம் அவ்வித மரியன்னையின் உள்ளுணர்வில் நிலைத்திருக்க அடிக்கடி மரியன்னையைப் பற்றி ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும் மரியன்னையின் உள்ளுணர்வை இழக்கும் நிர்ப்பாக்கியம் உனக்கும் நேரிடின், உன்னுடைய தலைமை அரசியிடம் அமைதியாகத் திரும்பிச்செல்; சென்று அவளிடம் உன்னையே சீர்திருத்திக்கொள்.

#### ii. இவ்வித உள்ளரங்க பயிற்சியின் வியத்தகு விளைவுகள்

இந்தப் பத்தி முயற்சியைப் பற்றி நான் சொல்லுவதைவிட, பழக்கம் உனக்கு அதிகமாய்ப் பயிற்றுவிக்கும். நான் உனக்குக்கற்பித்தபத்தி முயற்சியை அனுசரிப்பதில் நீ உறுதியாக இருந்தால் வியப்பும், அதே நேரத்தில் மகிழ்ச்சியும் கொள்ளும் படியான அவ்வளவு ஏராளமாக அருளின் உயர்ந்த, மிகுந்த பலன்களை இந்தப் பத்திமுயற்சி வழியாக அடைவாய்.

ஆகவே, பிரியஆத்துமமே! நமது வேலையைத் துவக்குவோம். இவ்வித ஈடுபாட்டின் நம்பிக்கைக்குரிய பயிற்சியினுல் நாம் புனித அமிர்தநாதருடன் பின்வருமாறு சொல்லுவதற்கான அருளை அடைவோம். "மரியன்னையின் ஆத்துமம் ஆண்டவரை வாழ்த்த நம்மில் இருக்கக்கடவது; அவளது எழுச்சி இறைவனில் மகிழ நம்முள் இருக்கக்கடவது." புலமைசான்ற துறவிடத்தின் தந்தை (மடாதிபதி) குயரிக் (Guerric) சொல்வதைக்கேள்: மரியன்னையின் அரவணைப்பிலே வாழ்வதைவிட அபிரகாமின் அரவணைப்பிலே வாழ்வது அதிக பெருமைக்குரியதும், மகிழ்ச்சிக்குரியதுமான ஒருநிகழ்ச்சி' என்று நினையாதே. ஏனெனில், அபிரகாமின்மடி விண்ணுலகம் என்று அழைக்கப்பட்ட போதிலும் மரியன்னையின் மடிதான் தமது திருக்குமாரனின் அரசிருக்கையாகப் பரமபிதா தெரிந்துகொண்டார்."

இந்தப் பத்திமுயற்சிபிரமாணிக்கமாக அனுசரிக்கப்பட்டால் மகிழ்வுக்குரிய பலபலன்களை ஆத்துமத்தில் அது உண்டுபண்ணுகிறது. அவ்வித பலன்களில் எல்லாம் சிறந்தது இந்தப் பத்திமுயற்சி நமது ஆத்துமத்தில் மரியன்னையின் வாழ்வை இவ்வுலகில் முதலாய் நிலைநாட்டுதலே. இவ்வித மாற்றத்தினுல் ஏற்படும் விளைவு இதுவே. இதுமுதல் வாழ்வது நமது ஆத்துமமல்ல. ஆனுல், மாமரி அதனுள் வாழ்கிருள். ஏனெனில், மரியன்னையின் வாழ்வு நமதுஆத்துமத்தின் வாழ்வாக மாறுகின்றது. இவ்விதமாக விவரிக்க முடியாத, ஆனுல், உண்மையான அருளினுல் தூயகன்னிமரி ஓர்ஆத்துமத்தில் அரசியாக ஆவாளானுல், எத்தகைய அதிசயங்களைத்தான் அங்கு செய்யமாட்டாள்! பெரும் அற்புதங்களைப் புரிபவள் அவள், சிறப்பாக நமது ஆத்துமத்தில். ஆனுல், அவைகளை நமது ஆத்துமத்தில் புரியும்போது நமதுஆத்துமமே அறியாதவண்ணம் அவ்வளவு மறைவாகச் செய்கின்றுள். ஏனெனில், நமது ஆத்துமம் அவைகளை அறியுமானுல் அவளுடைய செய்கைகளின் அழகை அது குலைத்துவிடும்.

மரியாள் எல்லா இடங்களிலும் பலனளிக்கும் கன்னிகையாக இருக்கின்றமையால் தான் தங்கியிருக்கும் ஆத்துமத்தில் ஆத்தும பரிசுத்தத்தையும், உடலின் கற்பையும், தூய கருத்தினையும், உயர் குறிக்கோளையும், நற்செயல்களின் பயனையும் உணர்த்துகிருள் (உண்டாக்குகிருள்). அன்பிற்குரிய ஆத்துமமே! தேவாதிதேவனையே ஈன்றஅன்னை—எல்லாச் சிருஷ்டிகளையும்விட உயர்ந்த மரியாள் ஒருபிரமாணிக்கமுள்ள ஆத்துமத்தில் சோம்பி வீணுக வீற்றிருக்கிருள் என்று நினையாதே. யேசுக்கிறீஸ்துவை அந்தஆத்துமத்தில் வாழச்செய்வாள். அவ்வாத்துமம் யேசுவோடு எல்லாக் காலமும் ஒன்றித்திருக்கச்செய்வாள். "எனது சிறுபிள்ளைகளே! கிறீஸ்துநாதர் உங்களில் உருவாகுமட்டும் நான் பிரசவ வேதனைப் படுகிறேன்" என்கிருர் புனித சின்னப்பர் கலாத்தியருக்கு எழுதிய நிருபத்திலே. யேசுக்கிறீஸ்து ஒவ்வொருஆத்துமத்திலும், மொத்தமாக எல்லா ஆத்துமங்களிலும் மரியாளின் கனியாக இருப்பாரானுல், மரியாளே தங்கிவாழும் அவ்வாத்துமத்தில் அவர் தனிப்பட்டவிதமாகமரியாளுடையகனியாகவும், தலைசிறந்தவராகவும் இருக்கிருர்.

கிறீஸ்துநாதரின் ஊழியத்தில் அந்த ஆத்துமத்திற்கு எல்லாவற்றிலும் எல்லாமுமாகிருள் மரியாள். மரியாளின் ஆழ்ந்த விசுவாசத்தால் புத்தி தெளிவாகிறது. மரியாளின் தாழ்ச்சியால் இருதயம் ஆழ்ந்ததாக மாறுகிறது. அனல் விட்டெரியும் மரியாளின் பிறர்சிநேகத்தின் உதவி கொண்டு, மரியாளின் கற்பினுல் பரிசுத்தமாக்கப்படுகிறது. அவளது தாய்க்குரிய கண்காணிப்பில் பெருந்தன்மை பெறுகிறது. இவ்வளவு விவரிக்கவே தேவையில்லை. அறிவாளிகளும், அகங்காரிகளும், ஏன்? இப்பத்திமுயற்சியில் மூழ்கியிருக்கும் அநேகர் முதலாய் அவநம்பிக்கை கொள்ளும் அவ்வளவு மகத்தான புதுமைகளை — மரியாள் ஆற்றிவரும் அற்புதங்களை அனுபவம் மட்டுமே நமக்குப் படிப்பிக்கக்கூடும்.

#### iii. எதிர்காலத்தில் பரிசுத்த அடிமைத்தனத்தின் விசேட அலுவல்

முதன்முதலாகக் கடவுள் இவ்வுலகிற்குத் தாழ்மையாகத் தன்னையே ஒன்றுமில்லாதவராக்கி வந்தது மரியாள் வாயிலாகவே. உலகத்தை ஒரு குடைக்கீழ் ஆளவும், சீவியர்களையும், மரித்தவர்களையும் நடுத்தீர்க்கவும் வரும்பொழுது மரியாள் வழியாகவே வருவார் எனக்கருதுதல் பிழையாகுமோ? அவருடைய இரண்டாம் வருகை அவ்விதமாகத்தான் இருக்குமென்று திருச்சபை முழுமையும் எதிர்பார்க்கிறது. எப்பொழுது எப்படி இஃது நடைபெறும் என்பதை யார் அறிவர்? விண்ணுலகம் மண்ணுலகத்திற்கு எட்டாத்தொலையில்இருப்பதுபோலக் கடவுளுடைய எண்ணங்கள் நமது ஆற்றலுக்கு அப்பாலுள்ளன. அந்தஆண்டவன் மனிதர் எதிர்பாராத நேரத்தில் எதிர்பாராதவிதமாக வருவார் என்பதை நான் உறுதியாக அறிவேன். கடவுளுடைய இரண்டாம் வருகைபற்றி வேதாகமத்தை முற்றிலும் உணர்ந்த ஞானிகள்முதலாய் எதிர்பாரார்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2-ம்வருட
## மரணஞாபகம்
**20-9-56**

அன்புமிகும் மரியரத்தினமே! ஆசை நிலவொளியே! தன்பஉலகை நீர் துறந்து துயோனிடம் சென்றீரே. கற்சிலைச்சிற்ப மெனக் கண்முனனும், கருத்ததிலும் பொற்புறவே பொருந்திநீர்-பூதலத்தை நீர்பிரிந்தும், நீர் எமக்கு அளித்துவரும் அரும்பெரும் செயல்களைச் சகிக்கமுடிய வில்லை. நினது ஆன்மா ஈசனுர்பக்கத்தில் தண்மதிபோல் வீற்றிருந்தாலே போது மானது. உம்மை நினைந்துநான் தனிமை யில் விம்முகிறேன். எமதுவிம்மல் எவரு டைய கண்களிலும் தென்படுவதில்லை. ஏனெனில், எமதுநொந்தஇதயமதில் என் றென்றும் அழியாத சின்னமாய் இடம் பெற்றுள்ளீர். வல்லபரன் தமது அருகா மையில் என்றும் உம்மைஅமர்த்திக்கொள் ளச் சதாசகாய அன்னையை அனுதினமும் வேண்டுகிறேன்.

மனைவியின்பிரிவால்நொந்துவாடும்

**S. A. பிலிப்பையாவும், உறவினரும்**

முல்லைத்தீவு

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 1984**

***யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்***

யாழ்ப்பாணம், பெரியதெரு
அல்பிறெற் எட்வேட் தம்பர்
— வழக்காளி.

எதிராக

யாழ்ப்பாணம், கரையூர்

1. பொன்னு தம்பிராசா தானுகவும், தனது பெண்சாதி காலம்சென்ற இலட்சுமிப்பிள்ளையின் ஆதனப் பிரதியாகவும்.

அலவாய், வடக்கு

2. கந்தர்முதலி அல்லது முருகேசு தானுகவும், தனது பெண்சாதி காலம்சென்ற இலட்சுமிப்பிள்ளை யின் ஆதனப்பிரதியாகவும்.

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1984-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின் னுல் விபரிக்கப்படும் ஓர்துண்டுக்காணி 1958 ஹு கார்த்திகை மீ 1 உ சனிக் கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத் தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 3,213-ம், இன்னும் ரூபா 2,500-க்கு 23-12-57 தொடக்கம் 1-4-58 வரையும், 100-க்கு 8% வட்டியும், பின்பு கூட்டுத் தொகைக்குஇறுபடும்வரைக்கும் 100-க்கு 5% வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 285 சதம் 87.

### காணிவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிகோயிற் பற்று, சுண்டிக்குளி இறைபேயன் தலை மடையிற்புலம். கிழக்கு, பேயன்சுடுகாடு, கிழக்கு பேயன்தலைமடையிற்புலமும், பேயன்சுடுகாடு ப. நி. இ. 11 குளி $4\frac{1}{2}$யும், பனைகளும், மற்றும் வான்பயிர்களும். எல்லை: தற்காலம் கிழக்கு—மிசிஸ். யேன்ஸ்நோறெற்யோசேப்பின் ஆதனம். முன்பு எ. பி. மோசெஸ்சின் ஆதனம்—வடக்கு. எலிசபெத் முத்தம்மா வர்ண குலசிங்கத்தின்ஆதனம். மேற்கு—காலம் சென்ற அல்பிறெற் நிக்கலெஸ்சந்தியாகு வின் உரிமைக்காரரினதும், வின்ஸ்லொஸ் லாவிஸ் எதிர்மனசிங்கத்தினதும், பங் காளரினதும், ஆதனங்கள், தெற்கு—குறித்த எதிர்மனசிங்கிக்கும். பங்காளரி னதும் ஆதனமும், றேட்டும், எ. பி. மோசெஸ்சின் ஆதனமும், தற்காலம் குறித்தமிசிஸ். மோசெஸ்சின்ஆதனம்.

பதிவுஇலக்கம் $\frac{60}{223}$, $\frac{115}{269}$.
இக்காணிபிரிவிடுதல் இலக்கம்
D $\frac{44}{199}$, D $\frac{44}{200}$.

**செ. இரத்தினசபாபதி,**
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.
24, சப்பெல்வீதி,
யாழ்ப்பாணம். 20-9-58

---

**திரு. சுவாம்பிள்ளை பிலுப்பையா அவர்களின்**

## 25-ம் வருட
## மரண ஞாபகம்

"என்னுடைய சீவியமும் மின்னலைப் போல் தோன்றி மறைந்தது"
"என்னைச்சீவியத்தில் நேசித்தவர்களே! என்னை மரணத்திலும் மறக்காதீர்கள்"

எங்கள் குடும்பத்திற் செயசோதியாய்ப் பிரகாசித்து, எல்லோரையும் அன்புடன் நேசித்துவந்த எனது பிரிய பத்தாவும், எங்கள் அருமைத் தந்தையருமான திரு. சுவாம்பிள்ளை பிலுப்பையா அவர்கள் எங் களைப் பரதவிக்கவிட்டுப் பரமனின் பாதம் போய்ச்சேர்ந்த 25-வது வருடம் வருகிற 30-9-58 செவ்வாய்க்கிழமை பூர்த்தியா கின்றது. இதைக்கண்ணுறும் சகோதர சகோதரிகளே,இவ்வாத்துமத்தை நினைவு கூர்ந்து வேண்டிக்கொள்ளத் தயவாய் வேண்டுகிறோம்.

நித்திய இளைப்பாற்றியை இவருக்குக் கொடுத்தருளும் சுவாமி. முடிவில்லாத பிரகாசம் இவருக்குக் கட்டளையிட்டரு ளும்.

இவரை இழந்து பரதவிக்கும்

மனைவி: எலிசபெத் பிலுப்பையா
பிள்ளைகள்:
Mrs. ஞேசலின் இம்மனுவேல்
,, மெக்டலின் சுவாம்பிள்ளை
,, யோசேப்பின் சுவாம்பிள்ளை
,, கிறேஸ் சுவாம்பிள்ளை
,, ருக்மணி செல்வரட்ணம்
Mr. P. F. யோசெவ்

---

## அறிவித்தல்

### மட்டக்களப்பு தன்னுமுனை அர்ச். செபமாலைமாதா ஆலய ஆண்டுவிழா

திரிகோணமலை மேற்றிராசனத்தில் தன்னுமுனைப் பங்கைச்சேர்ந்த புல்லு மலை என்னும் கிராமத்தில் அர்ச். செப மாலைமாதாவின் பேரால் ஓர் தேவால யம் உண்டு. இது இம்மேற்றிராசன யாத் திரை ஸ்தலங்களிலொன்று. இத்தேவால யத்தில் இவ்வருடம் ஐப்பசிமாதம் 5-ம் திகதி திருநாள் கொண்டாடப்படும். இத்திருநாள் 21-9-58 பிற்பகல் 5-30 மணிக்குச் செபமாலை அன்னையின் கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகும். அன்று முதல் ஒவ்வொருநாளும் மாலையில் திவ் வியநற்கருணை ஆசீர்வாதம் அருளப்படும். திருநாளுக்கு முந்தியதினங்களாகிய 3-ம், 4-ம் திகதிகளில் வண. ஹென்றி பொன் னையா சுவாமியாரவர்களால் பிரசங்கங் கள் செய்யப்படும். 4-10-58சனிக்கிழமை மாலை 6-30மணிக்குச் செபமாலைஅன்னை யின் திருச்சுரூபச் சுற்றுப்பிரகாரம் நடை பெறும்.5-10-58காலை 6மணிக்கும், 7-30 மணிக்கும் பூசைப்பலிகள் ஒப்புக்கொடுக் கப்படும். 7-30மணிக்கு மகாவந். இக்னே ஷஸ் கிளென்னி, எஸ். ஜே. மேற்றிராணி ஆண்டவர் அவர்களால் திவ்வியபலிபூசை ஒப்புக்கொடுக்கப்படும். இம்முறை யாத் திரிகர்கள் தங்குவதற்குவேண்டிய வசதி கள் செய்யப்பட்டிருக்கின்றன. தண்ணீர் போதிய அளவுகிடைக்க வசதியுண்டு. பிர யாணவசதிகளும் செய்துகொடுக்கப்படும். விசுவாசிகளனைவரும் திருநாளில்பங்கு பற்றித் தேவதாயாரின் அருளைப்பெறு வார்களாக.

J. ALEXANDER
கட்டளைக்குரு

தன்னுமுனை

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்


கிறீஸ்து இராசா,பரி.சதாசகாயமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். பிலிப்புநேரி யார், அர்ச். அந்தோனியார், அர்ச்.றீத் தம்மாள்,அர்ச்.அன்னம்மாள்,அர்ச். கயித் தார்முனீந்திரன் ஆகியவர்களிடம் நான் கேட்டமன்றாட்டுப் பூர்த்தியாயிற்று.இவர் கள்நாமம் என்றும் புகழப்படுவதாக நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன்.

சீ. பீ. செல்வராசா

பத்தாவத்தை, இளவாலை.

---

## அமரத்துவம்



**பிறப்பு:** 8—4—30 **இறப்பு:** 10—9—58

எனது அருமைமகனும்,
எங்கள்ஆருயிர்ச் சகோதரனுமான
**நீ. கிறிஸ்தோப்பர்**

எங்கள் குடும்பத்தின் அணையா விளக்காக இருந்து, அன்பினுலும், தம்முடைய ஓயாதஉழைப்பினுலும் குடும்பவிஷயங்க ளைத் தமதுதலைமேற்சுமந்து உடன்பிறந் தாரை மேன்மையான அந்தஸ்தில் வைத் துத் தமதுவாலிபவயதில் சடுதியாக நோய்கண்டு இறைவனடியை அடைந் தார்.

இதனைக்கண்ணுறும் சகலரையும் இவ ரின்ஆத்துமா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்படி தாழ்மையுடன் வேண்டிநிற்கின்றோம்.

இரக்கமுள்ள யேசுவே! இவருடைய ஆத்துமத்துக்கு நித்தியஇளைப்பாற்றியைக் கட்டளைபண்ணியருளும்."

இவரைப்பிரிந்து துயருறும்

பிதா: **ம. அ. நீக்கிலாப்பிள்ளை.**
சகோதரர்: **அல்பேட், பீற்றர், பிலோமினு, திரேசா புஷ்பம்.**

சில்லாலை மேற்கு
பண்டைத்தரிப்பு

---

### சதாசகாய நாயகிக்கு நன்றி

பரிசுத்த சதாசகாயநாயகியின் தய வால் நான்கேட்டுக்கொண்ட பலசகாயங் கள் கிடைக்கப்பெற்றேன். எனதுஅசட் டைத்தனத்தால் நன்றியறிதல்கூற மறந் தமைக்காக வெகுவாய்வருந்தி மன்னிப் புக்கோருகின்றேன். இன்னும் நான்கேட் டுக்கொண்ட சிலசகாயங்களை மாதாஎனக் குப் பெற்றுத்தருவாளென உறுதியாகக் காத்திருக்கிறேன்.

மாதாவின் மைந்தன்

பேசாலை.

---

### நன்றித்துதி

பிறேக்நகரின் திருக்குழந்தை யேசு வின் இரக்கத்தினுல் நான் மூன்றுதடவை களில் பணநெருக்கடியான மோசமான நிலையிலிருந்தும் காப்பாற்றப்பட்டேன். நன்றியாக இதனைப் பிரசுரிக்கிறேன்.

— ஓர்பக்தன்

* * *

### நன்றித்துதி

பரிசதாசகாயமாதாவிடம் நான் கேட்ட மன்ருட்டுக்கிடைக்கப்பெற்றேன்.அவவின் நாமம் எங்கும் புகழப்படுவதாக. நேர்த் திப்படி பிரசுரிக்கிறேன்.

P. J. A

யாழ்ப்பாணம்

---

### தேவை

12—18வயதுள்ள பையன்கள்தேவை. நேர்முகதாவில் சந்திக்கவும்.

V. T. பெர்னுண்டோ
டென்ரிஸ்ற்
(பல்வைத்தியர்)

யாழ்ப்பாணம்

---

புத்தக மதிப்புரை

## திருச்சபைச் சரித்திரம்

தமிழாக்கம்: **அதிசங். ஜெ. ஜெகநாதர் சுவாமிகள்**

பிரசுரமும், கிடைக்கும் இடமும்:

**தமிழ்இலக்கியக்கழகம், தூத்துக்குடி,**

விலை, பிரதி ரூபா 2-00.

மனுக்குலம் நித்திய பேரின்பபாக் கியத்தை அடைந்துகொள்ளுமாறு தமதுஇரட்சணியபலனையும், சத்திய போதனையையும் அகிலமுழுவதுக்கும் அளிக்கும்படியாக நமது இரட்சா பெருமானுகிய யேசுக்கிறீஸ்துநாதர் ஓர்திருச்சபையை ஏற்படுத்தினுர். அதற்குத் தவருவரத்தையும் அருளி னுர். நரகத்தின்வாசல்கள் அதனை மேற்கொள்ளமாட்டாவென்று அவர் சத்தியவாக்காக அருளிச்செய்தபடி யே எத்தனையோ பயங்கரவேதகலா பனைகள், பேதகங்கள், பிரிவினைகள், இடறல்கள்மத்தியில் அதுஎதற்குமே அஞ்சிப்பின்வாங்காது நாள்தோறும், காலந்தோறும் பிரசித்தியும், அபிவிர்த் தியும் அடைந்து, சகலசாதிசனங்கள் மத்தியிலும் இன்னுமே பரந்துகொண் டிருக்கின்றது.

தனதுஎதிரிகள் மறைந்தும் தான் மறைந்தொழியாமல் தனதுதெய்வீக ஸ்தாபகர் தன்னிடம்ஒப்படைத்த சத் தியம், பரிசுத்தம், தத்துவமாகியமூன் றையும் அது கருந்தனம்போலக்கருதிப் பழுதறக்காப்பாற்றிவந்திருக்கிறது. அஞ்ஞான பழக்கவழக்கங்களைச் சீர்ப் படுத்தியும், காட்டுமிராண்டிகளை நாக ரீகப்படுத்தியும், சாஸ்திரங்களைப்பாது காத்து வளப்படுத்தியும், சீவனையும், ஒளியையும் எங்கும்பரப்பியும் பலவீன ருக்கு ஊன்றுகோலாகவும், திக்கற்ற வர்களுக்குத் துணையாகவும், நிர்ப்பாக் கியருக்கு ஆறுதலாகவுமிருந்து, அடி மைகளுக்குச் சுயாதீனத்தையும், ஏழைகள்மீது இரக்கத்தையும் அடைந் துகொடுத்து, பகைவர்மத்துக்குப்பதில் பாஸ்பரஉதவியையும், அருவருக்கத் தக்க அக்கிரமங்களுக்குப்பதில் உந்நத புண்ணியங்களையும் நிலைநாட்டிய — ஒரேவார்த்தையில் உலகத்தையேபுதுப் பித்த திருச்சபையின்வரலாற்றை ஆரம் பத்திலிருந்து விரிவாகக்கூறும் தமிழ் நூல்கள்இல்லாதிருந்தமை பெருங் குறைவாயிருந்தது. ஆகவே, உலக மொழிகள் பலவற்றிலும் வெளிவந் துள்ள திருச்சபைச்சரித்திரம் காலஞ் சென்ற அதிசங். ஜெ. ஜெகநாதர் சுவாமியவர்களால் தமிழாக்கஞ்செய் யப்பெற்றுத் தமிழ்நாட்டில் நல்வர வேற்பைப் பெற்றிருந்தது. பல்லாண்டு களாகக் கிடைக்கப்பெருதிருந்த இந்த அருமையான நூலைத் தூத்துக்குடி, தமிழ்இலக்கியக்கழகம் வெளியிட்டி ருப்பது கத்தோலிக்கதமிழ்மக்களுக் குப் பெருமகிழ்வூட்டுவதாகும்.

இந்நூல் யேசுக்கிறீஸ்துநாதர் காலந்தொட்டு இக்காலம் வரையிலு முள்ள ஆண்டுகளைப் பூர்வீககிறீஸ்து வர்களின்காலம், இடைக்காலம், நடை முறைகாலமென மூன்றுயுகங்களாகப் பிரித்துத் திருச்சபைச் சரித்திரத்தை அழகான தமிழிலே தெளிவாகஎடுத் துக்கூறுகின்றது. இடையிடையே காணப்படும் கேள்விகளும், சுருக்கமும் சிறந்தவிளக்கத்தைத் தரக்கூடியன வாகும். தேவபராமரிப்பு எத்துணை அன்புடன் திருச்சபையை அரவணைத் துவருகிறதென்பதையும், தாங்கள் திருச்சபையின் உறுப்பினராயிருப்பது எத்துணைமாபெரும்மகிமையென்ப தையும் இந்நூலைவாசிக்கும் கத்தோ லிக்கதமிழ்மக்கள் நன்குகண்டுணர்வார் கள். ஆகவே, அவர்கள் இதனைமன முவந்து வரவேற்பார்களென நம்புகி றோம். நமக்குஅனுப்பிய பிரதிகளுக் காக நன்றிகூறுகின்றோம்.

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, September 25-1958.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org